பக்கங்கள்: 20

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 ஆவணி 16 ஞாயிற்றுக்கிழமை 01.09.2019 கதிர் 300

**இனி இது ரகசியம் அல்ல!**

'நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பேன் என்று வாக்குறுதி அளித்திருந்தேன் என்பது உண்மை. இப்போதும் அதுவே எனது நிலைப்பாடு' – என்ற சாரப்பட தமது யாழ். உரையில் கூறியிருந்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. பக்கம் 02

# 10 நாள்கள் முறுகல் நிறுத்தத்துக்கு ரணில் – சஜித் அணிகள் இணக்கம்

## இருதரப்பு சந்திப்பை அடுத்து





கொழும்பு, செப்ரெம்பர் 01

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது தொடர்பில் கடந்த ஒரு மாத காலமாக பகிரங்கவெளியில் கருத்து மோதலில் ஈடுபட்டு வரும் கட்சித் தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆதரவு அணியும் பிரதித் தலைவர் அமைச்சர் சஜித் பிரேமதாஸ ஆதரவு அணியும் அடுத்த பத்து நாள்களுக்கு முறுகல் நிலையைத் தவிர்த்து 'கப்சிப்' என அமைதி பேண இணங்கியிருக்கின்றன. பக்கம் 02

## வடக்கில் 215 டிப்ளோமாதாரர்களுக்கு ஆசிரிய நியமனம் ஆளுநர் வழங்கினார்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செப்.02

மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் 215 டிப்ளோமாதாரர் ஆசிரியர்களுக்கான பக்கம் 11

## ஹாஸ்ய நடிகராகின்றார் ஜனாதிபதி மைத்திரியார்

### கோட்டாவின் பேச்சாளர் கிண்டல்



கொழும்பு,செப்.01

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதிகாரத்துக்கு வந்து நான்கரை வருடங்கள் கழிந்த தன் பின்னர் இப்போது அரசமைப்பு மாற்றம் பக்கம் 11

## மட்டக்களப்பு காரைதீவு பாரைக்குட்டி மீன்மயம்!

### கடற்கரை தீர்த்தக் கரையாகியது ஒருவருக்கு 10ஆயிரம் கிலோ மீன்



(சகாதேவராஜா)

மட்டக்களப்பு காரைதீவில் நேற்று சனிக்கிழமை பல லட்சக்கணக்கான பாரைக்குட்டி மீன்கள் பிடிபட்டன. பக்கம் 11

## யாழ். மாவட்டத்தில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளின் விவரம் கோருகின்றார் ஆளுநர்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம்,செப்.01

யாழ் மாவட்டத்தில் முப்படையினர் மற்றும் பொலிஸார் நிலைகொண்டுள்ள தனியார் காணிகள் தொடர்பான விவரங்களை உரிய ஆதாரங்களுடன் தெரியப் பக்கம் 11

## பிரதித் துணைவேந்தர் பதவிக்கு இருவர் யாழ். பல்கலை பேரவையால் பரிந்துரை

### பேராசிரியர்கள் சிறீசற்குணராசா, மிகுந்தன்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு பிரதித் துணைவேந்தர் ஒருவரை நியமிப்பதற்கு பேராசிரியர்கள் இருவரின் பெயர்களை பல்கலைக்கழக மானியங்கள் பக்கம் 11

## பெண்களே! அச்சமே வேண்டாம்! நம்புங்கள்; நாங்கள் இருக்கிறோம்

### தைரியம் ஊட்டுகின்றார் மஹிந்தர்



கொழும்பு,செப்.01

பெண்களின் துன்ப துயரங்களை அறிந்த ஒரே அரசு தமது அரசாங்கம் என எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முதலாவது மகளிர் மாநாட்டில் கலந்து கொண்டு பக்கம் 11

## முதல் வாக்கைத் தனக்கு அளிக்குமாறு வேண்டும் ஜே.வி.பி. இரண்டாவதை ஐ.தே.கவுக்குப் போடக் கோருகின்றதாம்!

### இப்படி யாழில் வைத்துத் தகவல் வெளியிட்டார் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செப்.01

நாட்டில் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் அனைத்து மக்களும் வாக்களிக்க வேண்டும். ஏனெனில் வாக்களிப்பு குறைந்து, இரண்டாவது விருப்பு வாக்குகளை எண்ண வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் பாரிய கலவரம் வெடிக்கும் என நவசமசமாஜ கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன எச்சரிக்கை விடுத்துள்ளார். பக்கம் 11

# மாகாண சபைத் தேர்தல் இப்போதைக்கு இல்லை!



## இயலாமையை ஒப்புக் கொண்டார் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர்

கொழும்பு,செப்.01

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலை எதிர்வரும் நவம்பர் 15 ஆம் திகதி முதல் டிசம்பர் 7 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் நடத்தத் தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இந்த நிலையில் நிலுவையாக உள்ள மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்குத் தேவையான புதிய சட்டங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படாத நிலையில் மாகாண சபைத் தேர்தலுக்கான அழைப்பு விடுக்கப்படவில்லை.

இதனால் பழைய முறைப்படி தேர்தலை நடத்தும் சாத்தியக் கூறுகள் உள்ளனவா என்று உயர் நீதிமன்றின் ஆலோசனையை ஜனாதிபதி கோரியிருந்தார்.

நாடாளுமன்றில் புதிய திருத்தம் நிறைவேற்றப்பட்ட பின்னர் பழைய முறைப்படி தேர்தலை நடத்த முடியாது, புதிய சட்டத் திருத்தங்களுக்கு அமைய தேர்தல்களை நடத்துவதற்கான ஒழுங்கு முறைகளை சட்டமாக நாடாளுமன்றம் நிறைவேற்றிய பின்னரே அத்தேர்தல்களை அதற்கு அமைய நடத்த முடியும் என உயர் நீதிமன்றம் தனது ஆலோசனையைத் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் மாகாண சபைத் தேர்தலை நடத்த வாய்ப்பில்லை என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

## நல்லூர் உற்சவத்தில் பணியாற்றிய சாரணர்களுக்கு நேற்று கௌரவம்





யாழ்ப்பாணம்,செப்.01

நல்லலூர்க் கந்தன் ஆலய திருவிழா காலம் உட்பட ஏனைய காலங்களிலும் சமூக சேவைகளில் பங்குபற்றிய சாரணியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நல்லை ஆதீனத்தில் நேற்று நடைபெற்றது.

சாரணிய சங்கத்தின் ஏற்பாட்டில் சாரணிய சங்க தலைமை மாவட்ட ஆணையாளர் இ. தவபாலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாநகர முதல்வர் இமானுவேல் ஆர்னோல்ட் கலந்து கொண்டு சாரணியர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி கௌரவித்தார்.

இந்நிகழ்வில் நல்லை ஆதீன குரு முதல்வர் ஞானதேசிக பரமச்சாரிய சுவாமிகள், மாநகர ஆணையாளர் ஜெயசீலன் மற்றும் சாரணிய சங்கத் தலைவர்கள், பிரதிநிதிகள், சாரணியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## 19ஆவது திருத்தத்தை நீக்குவதற்கு மைத்திரி - மஹிந்தர் இணக்கமாம்!

கொழும்பு,செப்.01

அடுத்து ஆட்சியமைக்கும் அரசாங்கத்தின் மூலம் 19ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தை ரத்துச் செய்வதற்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவும் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளனர். ஜனாதிபதிக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் இடையில் அண்மையில் நடைபெற்ற விசேட சந்திப்பின் போது இந்த இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது என்று கூறப்பட்டது.

19ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டம் காரணமாக ஜனாதிபதி, பிரதமர் மட்டுமல்லாது சபாநாயகரும் நாட்டை ஆட்சி செய்ய ஆரம்பித்துள்ளார் என ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

மூன்று அதிகாரத் தூண்கள் உருவாகி இருப்பது அரசாங்கத்தில் பிரச்சினைகள் ஏற்பட காரணமாக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை 19ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றும் முன்னர், அதில் அடங்கியிருந்த ஷரத்துக்கள் தொடர்பாக உன்னிப்பாக ஆராய்ந்திருக்க வேண்டும் என மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

### 10 நாள்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், அமைச்சர் சஜித் பிரேமதாஸவும் கடந்த வியாழன் இரவு 9.30 மணி முதல் 11.00 மணி வரை அலரி மாளிகையில் சந்தித்துப் பேசிக் கொண்டனர்.

இந்தச் சந்திப்பின்போது சஜித் தரப்பில் அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சர் ஹர்ஷா டி சில்வாவும், பிரதமர் ரணில் பக்கத்தில் அமைச்சர் ராஜித சேனாரத்னவும் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்யும் நடைமுறை குறித்து இரு தரப்பிலும் பேசிக் கொண்டனர் என்று கூறப்பட்டது.

எனினும் அடுத்த பத்து நாள்களுக்குப் பகிரங்கவெளியில் மோதும் நடவடிக்கை எதிலும் இரு தரப்பினரும் ஈடுபடக்கூடாது என்ற முறுகல் தவிர்ப்பு இணக்கத்துக்கு அவர்கள் வந்துள்ளனர் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

இதேசமயம் –

சஜித் சார்பில் – அவர் இல்லாமல் – மங்கள சமரவீர, மலிக் சமரவிக்கிரம, ரஞ்சித் மத்துமபண்டார, கபீர் காசிம் ஆகியோரைக் கொண்ட ஓர் அணியும் –

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தரப்பில் – ரணில் விக்கிரமசிங்க, ரவி கருணாநாயக்க, அகிலவிராஜ் காரியவசம், லக்ஷ்மன் கிரியெல்ல, தயா கமகே ஆகியோர் கொண்ட ஓரணியும் –

தனியாக அலரிமாளிகையில் சந்தித்து தற்போதைய நெருக்கடி நிலைமை குறித்து விரிவாகப் பேசின என்றும் –

அப்போதும் முறுகல் தவிர்ப்புக்கான இணக்கம் வலியுறுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த இரு அணிகளும் செப்ரெம்பர் 6ஆம் திகதி மீண்டும் சந்தித்துப் பேச இணங்கியுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உண்மையில் அத்தகைய முயற்சி ஒன்றுக்குக் கடந்த வாரத்தில் அவர் இணங்கினார். ஆனால் அது அவர் கைதவறிப் போய்விட்டது என்கின்றன கொழும்புத் தகவல்கள்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய மூவருக்குமே ஜனாதிபதிப் பதவி என்பது இனி எட்டாக்கனியாகி வருகின்றமை வெளிப்படையானது.

அதனால், மூன்று 'செவின்ரி'களும் சேர்ந்து நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்கவும் –

பிரதமர் தலைமையிலான ஆட்சி முறையின் கீழ் அதிக அதிகாரங்கள் கொண்ட பிரதமர் பதவிக்குத் தொடர்ந்து இலக்கு வைத்துத் தங்களுக்குள் போட்டியிடவும் –

இணக்கம் கண்டுள்ளன என்று சாடை மாடையாகச் செய்திகள் வெளியாகியிருந்தன.

'நெருப்பில்லாமல் புகை வராது' என்பார்கள். இந்த விவகாரத்திலும் அது சரியானதுதான்.

கடந்த வாரத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து, இது போன்ற ஒரு யோசனையை முன்வைத்தாராம். இது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவுடனும் பேசி ஓர் இணக்கத்துக்கு வந்தால் உடனடியாக அதை நடைமுறைக்குக் கொண்டு வரும் வழிவகைகள் குறித்து ஆராயலாம் எனப் பிரதமர் கூறினாராம்.

அதையடுத்து அன்றிரவு – கடந்த செவ்வாய்க்கிழமை இரவு – மஹிந்த ராஜபக்ஷவுடன் ஒரு சந்திப்பை முன்னெடுத்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

ரணிலின் யோசனையை மஹிந்தரிடம் விவரித்தார் ஜனாதிபதி மைத்திரிபால.

மூன்று தலைவர்களும் இணங்கி, தமக்குப் பின்னால் இருக்கும் எம்.பிமாரை ஒன்று திரட்டினால் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இலகுவாக – விரைந்து – நீக்கி விடலாம் என்று மஹிந்தரிடம் கூறப்பட்டது.

ஆனால், எந்தவிதத் தாமதமுமின்றி அந்தத் திட்டத்தை நிராகரித்தார் மஹிந்தர் எனக் கூறப்படுகின்றது.

பிளவுண்டு போய் இருக்கும் ஐ.தே.கட்சியில் தனது செல்வாக்கைத் தக்க வைக்கும் ரணிலின் இந்தத் திட்டத்துக்கு இணங்க முடியாது எனக் கைவிரித்தாராம் மஹிந்தர். அதனால் அந்தத் திட்டம் கிடப்பில் போடப்பட்டதாம்!

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழிக்கும் பேச்சு இனி இப்போதைக்கு சாத்தியப்படப் போவதில்லை என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

★ ★ ★

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி – பொதுஜன பெரமுன சமரசப் பேச்சுகள் நடக்கின்றன அல்லவா?

ஒருபுறம் எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் இரு தரப்பின் மூத்த தலைவர்களும் பேசுகின்றார்கள்.

மறுபுறத்தில் சுதந்திரக்கட்சியின் செயலாளர் தயாசிறி ஜயசேகரா, பொருளாளர் லஸந்த அழகியவண்ண, சு.கவையும் உள்ளடக்கிய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மஹிந்த அமரவீர ஆகியோர் பொதுஜனப் பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவை நேரில் சந்தித்து வேறுபாடுகளைக் களையும் சமரசப் பேச்சுக்களை முன்னெடுக்கின்றனர்.

இப்படி இரு தரப்புகளும் நெருங்கிவரும் எத்தனங்கள் ஒருபுறம் நடக்க, அதற்கு ஆப்பு வைக்குமாற்போல அரசியல் காய் நகர்த்தல்களை முன்னெடுத்திருக்கின்றார் பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ என்று கூறப்படுகின்றது.

எஸ்.பி. திஸநாயக்காவும், டிலான் பெரேராவும் கடந்த பொதுத் தேர்தலில் சு.க. பட்டியலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தவர்கள். அவர்களைத் தமது செல்வாக்கு மூலம் – சு.க. சார்பில் – தேசியப் பட்டியல் எம்.பியாக்கியிருந்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

தொடர்ந்தும் சு.க. சார்பில் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் தேசியப் பட்டியல் எம்.பிக்களாக அவர்கள் இருக்கத் தக்கதாகவே அவர்களை பொதுஜன பெரமுனவில் பகிரங்கமாகச் சேர்ந்துக் கொண்டிருக்கின்றார் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ.

ஒரு புறம் சு.க. பெரமுன சமரச முயற்சி – இணக்க ஏற்பாடு – நடந்து கொண்டிருக்கையிலேயே, சு.கவில் எஞ்சியிருக்கும் ஒரு டசின் எம்.பிக்களில் இருவரை – அதுவும் பொதுத் தேர்தலில் தோல்வியுற்ற பின்னர் சு.கவின் தேசியப் பட்டியல் மூலம் பின் கதவால் நாடாளுமன்றத்துக்குள் புகுந்த இருவரை, அவர்கள் இருவரும் எம்.பிக்களாக இருக்கத் தக்க நிலையில் சூறையாடியிருக்கின்றது பெரமுன.

இதனால் கொதித்துப் போய் இருக்கின்றனராம் சு.கவின் எச்சசொச்ச எம்.பிக்கள் என்பது உள்வீட்டுத் தகவல்.

★ ★ ★

19ஆவது திருத்தம் மூலம் நாட்டின் அதிகாரம் மூன்று தலைமைகளிடம் பிரித்து ஒப்படைக்கப்பட்டு விட்டது என்று யாழில் புலம்பியிருந்தார் அல்லவா ஜனாதிபதி மைத்திரியார்?

ஜனாதிபதி, பிரதமர் ஆகிய இருவரோடு மூன்றாவதாக அவர் குறிப்பிட்டது சபாநாயகர் பதவியைத்தான்.

சுயாதீன ஆணைக்குழுக்களைக் கட்டியாளும் பொறுப்பு அவரிடம்தானே உள்ளது...!

சு.க. – பெரமுன சமரசப் பேச்சு சரிபட்டு வந்தால், அடுத்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் மைத்திரிபால சிறிசேனவுக்கு 'ஆறுதல் பரிசாக' அந்த மூன்றாவது பதவியான சபாநாயகர் பொறுப்பே வழங்கப்படும் எனத் தெரிகின்றது.

ஜனாதிபதிப் பதவி கோட்டாபாயவுக்கு. பிரதமர் பதவி மஹிந்தவுக்கு. சபாநாயகர் பதவிதான் மைத்திரிக்கு.

இப்படித்தான் யோசனைத் திட்டம் இருப்பதாக கூறப்படுகின்றது.

பாவம் மைத்திரியார். அப்படி ஓர் 'ஆறுதல் பரிசாவது' கிட்டினால் தான் அந்த மனிசர் ஆறுதலாக இனியும் அரசியல் செய்ய முடியும்...!

அது சரி... தேர்தலுக்கு முன்னர் அளிக்கப்படும் வாக்குறுதிகள் எல்லாம் நிறைவேற்றப்படும் என்பது என்ன நிச்சயம்?

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் தமிழர்களாகிய எங்களுக்கு மைத்திரிபால சிறிசேன தந்த வாக்குறுதிகள் போல, இப்போது ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் 'சபாநாயகர் பதவி' என்ற ஆறுதல் பரிசு தரப்படும் என மைத்திரியாருக்கு வழங்கப்படும் வாக்குறுதியும் காற்றில் பறந்துவிட்டால்...?

மைத்திரியார் நொந்துதான் போவார்...!

- மின்னல் -

# புதிய கூட்டணி உடன்பாடு தயார்

## கூறுகின்றார் ராஜித

கொழும்பு, செப்.01

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையில் கூட்டணி அமைப்பதற்கான வரைவு பங்காளிக் கட்சிகளால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. விரைவில் கூட்டணிக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் எனச் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவித்தார்.



கொள்கைத் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு கூட்டணியின் வேட்பாளர் யார் என்பது தீர்மானிக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கூட்டணியின் தலைவராக ஐ.தே.கவின் தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க செயற்படுவார். ஐ.தே.கவினால் பரிந்துரைக்கப்பட்டு தலைமைத்துவச் சபையினால் அங்கீகரிக்கப்படும் நபர் கூட்டணியின் செயலாளராக நியமிக்கப்படுவார். கூட்டணியின் செயலகம் சுதந்திரமான ஓர் இடமாக இருப்பதுடன் இதனைத் தலைமைத்துவச் சபை தீர்மானிக்கும்.

தொகுதி அமைப்பாளர்களாக ஐ.தே.க. அமைப்பாளர்கள் செயற்படுவார்கள். பலவீனமான தொகுதிகளில் கூட்டணியின் சார்பில் அமைப்பாளர்களை நியமிப்பதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டிருக்கிறது.

கடந்த புதன் பிரதமர், அமைச்சர் சஜித் பிரேமதாஸ, அமைச்சர் ரவி கருணாநாயக்க, ஐ.தே.க தவிசாளர் அமைச்சர் கபீர் ஹாசிம், அமைச்சர் மலிக் சமரவிக்கிரம, பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான அமைச்சர்கள் சம்பிக்க ரணவக்க, ரவூப் ஹக்கீம், மனோ கணேசன், ரிஷாத் பதியுதீன் ஆகியோருடன் நானும் சந்தித்து கூட்டணி ஒப்பந்தத்துக்கான வரைவை ஏகமனதாக அங்கீகரித்தோம்.

அடுத்த கட்டமாகக் கூட்டணிக்கான கொள்கைத்திட்டம் தயாரிக்கப்படுகிறது. இதற்கானவரைவொன்றை நான்கையளிக்கவிருக்கிறேன். இதில் உள்ளடக்கப்படவேண்டிய விடயங்கள் குறித்து ஆராய்வதற்காகப் பிரதமர் குழுவொன்றை நியமித்துள்ளார்.

அந்தக் குழுவில் என்னுடன், சம்பிக்க ரணவக்க, நிசாம் காரியப்பர், மனோ கணேசன், ரிஷாத் பதியுதீன், கபீர் ஹாசிம் மற்றும் அகில விராஜ் காரியவசம் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலைப் போன்று வெளித்தரப்பினரே கொள்கைப் பிரகடனத்தைத் தயாரிக்கிறார்கள். கூட்டணியில் 100 க்கும் அதிகமான சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் 20க்கும் அதிகமான அரசியல் கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. சகலரும் இணங்கக் கூடியதாக வேலைத்திட்டங்கள் தயாரிக்கப்படும். கொள்கைத்திட்டம் மற்றும் வேலைத்திட்டங்களை அடிப்படையாகக் கொண்டே அதற்குப் பொருத்தமான வேட்பாளர் யார் என்பது தீர்மானிக்கப்படும். தனிப்பட்ட நபர்கள் அவசியமல்லர், வேலைத்திட்டமே அவசியமானதாகும்.

மஹிந்த முகாமில் எப்பொழுதும் குடும்ப உறுப்பினர்களே வேட்பாளர்கள். எனினும் ஐ.தே.கவில் அவ்வாறான குடும்ப வேட்பாளர் எவரும் இல்லை. வெற்றி கொள்ளக்கூடிய, கொள்கைத் திட்டங்களை அடிப்படையாகக் கொண்ட ஒருவர் நியமிக்கப்படுவார். அவசரப்பட்டு அறிவிக்கப்பட்ட வேட்பாளர்கள் பலருக்கு தற்போது காற்றுப்போயுள்ளது. எனினும் நாம் எவ்வித அவசரமும் இன்றி வேட்பாளரை அறிவிப்போம் – என்றார்.

சஜித்பிரேமதாஸவுக்கு ஆதரவாக நடத்தப்படும் கூட்டங்கள் குறித்து கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர், கூட்டங்களை நடத்தி ஐ.தே.கவின் மக்கள் ஆதரவை வெளிக்காட்டுவது நல்லவிடயமாக இருந்தாலும், தலைமைத்துவத்தையும் கட்சியையும் விமர்சிப்பது ஆரோக்கியமானதாக அமையாது. ஜனாதிபதி வேட்பாளரைச் சந்திக்கு சந்தி கூட்டம் நடத்தித் தெரிவு செய்ய முடியாது. நாடு முழுவதும் சுவரொட்டிகளை ஒட்டி வேட்பாளரைத் தெரிவுசெய்ய முடியாது. வேட்பாளர் ஒருவர் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அவருக்கு ஆதரவு திரட்டும் வகையிலேயே சுவரொட்டிகளும், கட்டவுட்டுக்களும் வைக்கப்பட வேண்டும். இதுவே அரசியல் சம்பிரதாயமாகவுள்ளது – என்றார். (ஐ)



# ’அபயம்’ நிலையத்தில் நரம்பியல் சிகிச்சை மருத்துவ ஆலோசனை

யாழ்ப்பாணம், செப்.01

கூழாவடி ஆனைக்கோட்டையில் அமைந்துள்ள ’அபயம்’ மருத்துவ சேவை நிலையத்தில் கொழும்பிலிருந்து வருகை தரவுள்ள நரம்பியல் சிகிச்சை விசேட வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி தி. திவாகரன் (இன்றும் நாளையும்) முதலாம், இரண்டாம் திகதிகளில் காலை 9.00 மணி தொடக்கம் 11.00 மணி வரை இலவச மருத்துவ ஆலோசனை வழங்கவுள்ளார்.

மேற்குறிப்பிட்ட சிகிச்சை தேவையுடையோர் பதிவை ’அபயம்’ மருத்துவ சேவை நிலையத்தில் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# கோட்டாபயவின் உத்தியோகபூர்வ பேச்சாளர் இருவர்





ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் ஜனாதிபதிவேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள, கோட்டாபய ராஜபக்‌ஷவுக்கு உத்தியோகபூர்வமாக இணைப்பேச்சாளர்கள் இருவர் நியமிக்கப்பட்டுள்ளனர். கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கெஹலிய ரம்புக்வெல, டலஸ் அழகப்பெரும ஆகியோரே பேச்சாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

# கோட்டா மீதான வழக்கு தினசரி விசாரணைக்கு!

கொழும்பு, செப். 01

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்‌ஷவுக்கு எதிரான வழக்கை ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதி முதல் தொடர்ந்து தினசரி விசாரிக்க கொழும்பில் மூன்று நீதிபதிகளைக் கொண்ட ’ட்ர யல் அட் பார்’ மேல் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

மெதமுலன பகுதியில் டி.ஏ.ராஜபக்‌ஷ அருங்காட்சியகத்தை நிர்மாணிக்கும் போது அரச நிதியை முறைகேடாக பயன்படுத்தினர் என கோட்டாபய ராஜபக்‌ஷ மற்றும் அறுவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.






# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## மைத்திரியின் பயனற்ற சமாளிப்பு

யுத்தத்திற்கு முன்னரும், யுத்த சமயத்திலும் கொடி கட்டிப் பறந்த வடக்கின் கல்வித் தரம் தேசிய ரீதியில் ஒப்பிடுகையில் இப்போது தாழ்ந்திருக்கின்றது என்பது வாஸ்தவம்தான்.

ஆனால், அதற்காக இங்குள்ள மக்கள் எல்லோருக்கும் பொது அறிவும், அரசியல் ஞானமும், நடப்பு விவகாரங்களும் அறியாதவர்கள் அல்லர்.

தெற்கே இருந்து வடக்கே வரும் அரசியல்வாதிகள் பலரும் இங்குள்ள மக்கள் அரசியல் விவேகமும், பொது அறிவுமற்ற, உண்மை நிலைவரங்களை அறிந்து கொள்ளாத பத்தாம் பசலிகள் என்றுதான் நினைக்கின்றார்கள் போலும்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்திருந்த நாட்டின் தலைவர் – ஜனாதிபதி – மைத்திரிபால சிறிசேன இங்கு உரைத்தவற்றைக் கேட்டபோது, வடக்கு மக்கள் பொது அறிவும், விவேகமுமற்றவர்கள் என்று நினைத்துக் கொண்டுதான் அவர் அப்படிப் பேசுகின்றாரோ என்று எண்ணத் தோன்றியது.

நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும், நாடு உருப்படுவதற்கு அதுவே வழி என்று அவர் ஒப்புக் கொள்கின்றார்.

நாட்டின் அதி உச்சப் பதவிக்கு வருவதற்கு அத்தகைய வாக்குறுதி ஒன்றை நாட்டு மக்களுக்கு அவர் வழங்கியிருந்தார்.

ஆகவே, அதனை இன்றல்ல, என்றும் அவர் மறுக்க முடியாது. அதுதான் நிலைமை.

ஆனால், கடந்த நான்கரை வருட காலத்தில் அது நிறைவேற்றப்படாமைக்குத் தாம் காரணம் அல்லர் என்றும் –

அது, நாடாளுமன்றத்தின் பணி, ஐக்கிய தேசியக் கட்சியே தமிழ் மக்களை ஏமாற்றி விட்டது என்றும் – கூறி, பழியை ஐ.தே.க. தலையில் போட்டுவிட்டு அவர் தாம் தப்ப முயல்கின்றார்.

அப்படி அவர், கூறுவதை கேட்டு, அதை நம்புவதற்கு தமிழ் மக்கள் அரசியல் விவேகம் ஏதுமற்றவர்களோ அல்லது நான்கரை வருடங்களாக இந்த நாட்டில் கட்டவிழ்ந்த அரசியல் விடயங்களை அறியாத பத்தாம் பசலிகளோ அல்லர் என்பதை அவர் முதலில் உணரவேண்டும்.

அப்போதைய ஆளும் தரப்பான சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியே வந்து, அந்தக் கட்சியின் சார்பில் அப்போது தேர்தல் களத்தில் நின்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நேர் எதிரியாக, அன்னச் சின்னத்தில், அப்போது எதிரணிகளின் பொது வேட்பாளராக அந்தத் தேர்தலில் களத்தில் நின்றவர் மைத்திரிபால சிறிசேன.

அப்போதைய எதிரணியின் பொதுவேட்பாளராக அன்னச் சின்னத்தில் போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேனவுக்குத்தான் தமிழ் மக்கள் வாக்களித்தனரே தவிர, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் பொதுஜன ஐக்கிய முன்னணி வேட்பாளராக வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட்டவருக்கு அல்ல.

ஆனால், அந்தத் தேர்தலில் தமக்குக் கிட்டிய வெற்றியையும், அதனால் கிடைக்க ஜனாதிபதிப் பதவியையும், அதன் அதிகாரத்தையும் பயன்படுத்தி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியை மைத்திரிபால பின்னர் பிடுங்கி எடுத்தார்.

அதன் பின்னர் அக்கட்சியின் தலைவராக இருந்து கொண்டு, அதற்காக அவர் நடத்திய அரசியல் கபடத்தன வேலைகளே, 2015 ஜனவரி ஆட்சி மாற்றத்தின் மூலம் மக்களும் அரசியல் தலைவர்களும் கொண்டு வர முயற்சித்த நல்ல விடயங்கள் பாழாய்ப் போனமைக்குப் பிரதான காரணமாயிற்று என்பது வெள்ளிடை மலை.

ஐக்கிய தேசியக் கட்சியினரையும் அதன் தலைமையையும் தாஜா பண்ணி, பெரும் இழுபறிக் கஷ்டங்களுக்கு மத்தியில், புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான ஒரு நகல் வரைவு வரை காத்திரமாக முன்னேற வழிவகுத்த, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அதற்கு மேல் அந்த விவகாரத்தை நகர்த்த முடியாமல் போனமைக்குப் பிரதான காரணம், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திரக் கட்சி அந்த முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்புத் தராமல் கபடத்தனமாக முட்டுக்கட்டை போட்டு நின்றமையே என்பது பகிரங்க உண்மையாகும்.

ஒருபுறம், தாம் தலைமை வகித்த சுதந்திரக் கட்சியை புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகளுக்கு ஆதரவாக வழி நடத்த முடியாத அரசியல் அதிகார வெறுமையில் தள்ளாடிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மறுபுறத்தில் தமது கட்சியைக் கட்டுக் கோப்பாக வைக்க முடியாத பலவீன நிலைமையில் இருந்தமையால், அது கழுதை தேய்ந்து கட்டெறும்பாகி, எஞ்சிய பகுதி குட்டிச் சுவராக மிஞ்ச, பெரும் பகுதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுனவில் கரைந்து போயிற்று.

தாம் தலைமைப் பொறுப்பைப் பிடுங்கி எடுத்த சுதந்திரக் கட்சியை, புதிய அரசமைப்பு முயற்சிக்கு ஆதரவாகச் செயற்பட வைக்க முடியாத அரசியல் தலைமைத்துவ வறுமையில், லாயக்கற்றுப்போன – தோற்றுப்போன – அரசியல் தலைவராக இருந்து கொண்டு, அந்தத் தோல்விக்கான முழுப் பொறுப்பை நாடாளுமன்றத்தின் மீது அவர் சுமத்தித் தாம் தப்ப முயல்வது முழு அபத்தமாகும்.

குருவி தலைமீது பனங்காயை வைத்துவிட்டு, அது பறக்கவில்லை என்று ஆதங்கப்படுவதும், மைத்திரியிடம் ஜனாதிபதிப் பதவியைக் கொடுத்து விட்டு புதிய அரசமைப்புக்கு அவர் ஏதும் செய்யவில்லை என்று கூறுவதும் ஒன்றுதான் போலும்.

# மோசடிகளுக்கு வடமாகாண ஆளுநரும் துணைபோகின்றாரா? இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் கேள்வி!




யாழ்ப்பாணம்,செப்.01

வடமாகாணக் கல்வியில் நிகழும் நிதி மற்றும் நிர்வாக முறைகேடுகள் தொடர்பாக வடமாகாண ஆளுநர் சுரேன் ராகவனிடம் இலங்கை ஆசிரியர் சங்கம் முறையிட்டிருந்தும் கூட, இரண்டு மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும், அவற்றுக்கு நடவடிக்கை எடுக்கத் தவறிய ஆளுநரின் செயற்பாட்டால் ஆளுநரும் முறைகேட்டாளர்களைப் பாதுகாத்து வருகின்றாரா என்ற சந்தேகம் எழுந்திருப்பதாக சங்கம் தெரிவித்திருக்கின்றது.

இது தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்திருப்பவை வருமாறு:–

ஊழல் மற்றும் முறைகேடுகளுக்கு எதிராக அவர் வெளியிட்டிருந்த கருத்துக்களுக்கும், இரண்டு மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் முறைகேடுகளை விசாரிக்க முறையான விசாரணைக்குழு கூட அமைக்காத அவரது செயற்பாட்டுக்கும் இடையே காணப்படும் இரட்டைத் தன்மை கவலைக்குரியது.

இலங்கை ஆசிரியர் சங்கம் சகல குற்றச்சாட்டுக்களையும் ஆதாரபூர்வமாக நிரூபிப்பதாகவே சமர்ப்பித்திருந்தது. அக்குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக நீதியான விசாரணைகளையும் கோரியிருந்தது. ஆனால், விசாரணைக் குழுவை நியமிக்காத காலதாமதத்தால், குறித்த பாடசாலையொன்றில் மிக அவசரமாகப் போலியான பற்றுச்சீட்டுக்கள் போடப்பட்டு வருகின்றன என ஆளுநர் செயலகத்தினருக்கும் தெரிவித்திருந்தோம்.

நாம் குறிப்பிட்ட, எம்மிடமுள்ள ஆதாரங்கள் நிறைந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக, எவ்வித விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆனால், சம்பந்தப்பட்ட அதிபரொருவர் தொடர்பான தமது ஆரம்பகட்ட விசாரணையில் அவர் குற்றமற்றவராக நிரூபிக்கப்பட்டுள்ளார் என வடமாகாணக் கல்வி அமைச்சின் அதிகாரியொருவர் குறிப்பிட்டார் என ஊடகமொன்றில் வெளியான செய்தி கல்விச் சமூகத்தின் மத்தியில் மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கம் என்ற முறையில் சில ஆதாரங்களை வடமாகாண ஆளுநரின் மின்னஞ்சல் முகவரிக்கும் கூட அனுப்பி வைத்திருந்தோம். சாட்சியங்களையும், சாட்சியாளர்களையும் விசாரணைக்குழுவில் முன்னிலைப்படுத்துவோம் எனவும் தெரிவித்திருந்தோம்.

இந்நிலையில் –

வடமாகாண கல்வியில் நிகழும் பெரும் நிதி மோசடிகளையும், முறைகேடுகளையும் மறைக்கும் விதமாக வடமாகாண கல்வியதிகாரிகளின் ஆரம்பகட்ட விசாரணை நடந்துள்ளனவா? விசாரணை நடைபெற்றதாயின் முறைப்பாட்டை மேற்கொண்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தினரிடமிருந்து தகவல்களை ஏன் கோரவில்லை? வடமாகாண ஆளுநரின் செயலணியொன்று குறித்த பாடசாலைக்குச் சென்றதாகவும், அப்பாடசாலைகளில் நிதிமுறைகேடுகள் நடைபெற்றுள்ளமை கண்டறியப்பட்டதாகவும் கூட ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்த நிலையில் வடமாகாண ஆளுநர் ஏன் இன்று வரை நடவடிக்கை எடுக்கவில்லை? இந்த மோசடிகளுக்கும் முறைகேடுகளுக்கும் வடமாகாண ஆளுநரும் துணைபுரிகின்றாரா? இது போன்ற விடயங்களில் வடமாகாண ஆளுநர் சுரேன் ராகவன் உண்மை நிலையை தெளிவுபடுத்த வேண்டும்.

வடமாகாணத்திலுள்ள தேசிய மற்றும் வடமாகாண பாடசாலைகளில், பாடசாலைகளில் மாணவர்களின் அனுமதிக்கென பெருந்தொகையான பணத்தைப் பெற்றோரிடமிருந்து சில அதிபர்கள் முறைகேடாகப் பெற்றுவருகின்றனர். அவற்றில் ஒரு பகுதியினை தமது தனிப்பட்ட கணக்குகளிலும் வைப்பிலிட்டு முறைகேடாகச் சொத்துக்கள் குவித்துள்ளமை தொடர்பாகத் தகவல்கள் கிடைக்கப்பெறுகின்றன. ஊடகங்களிலும் வெளிவருகின்றன.

யாழ்ப்பாணப் பிரபல கல்லூரியொன்றின் அதிபர் தாம் அடைக்கவேண்டிய தனிப்பட்ட கடனை அடுத்த வருட மாணவர் அனுமதியின் போது திருப்பி தந்துவிடுவதாகக் கூறியுள்ளார் எனவும் தகவல்கள் கிடைக்கின்றன.

இதுபோன்ற முறையற்ற செயற்பாடுகளைக் கண்டு கொள்ளாமல், முறைகேடுகளை நிறுத்துவதற்கு ஆரம்பப் புள்ளியைக் கூட உருவாக்க முயலாமல் இருக்கும் வடமாகாண ஆளுநரின் செயற்பாடு கவலையளிக்கிறது.

இதுபோன்ற முறைகேடுகளை தடுக்காமல், வடமாகாணத்தை நேர்மனப்பான்மைகொண்ட, முன்னுதாரணமான கல்வி நிலைக்குக் கொண்டு வருவதென்பது ஒருபோதும் சாத்தியப்படப் போவதில்லை என்பதைப் பொறுப்புடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வடமாகாண ஆளுநர், எம்மால் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாக, இரண்டு மாதங்கள் கடந்த நிலையிலும் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளார். இனிவரும் காலங்களிலும் தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் இலங்கை ஆசிரியர் சங்கம் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு செல்வது தவிர்க்கமுடியாதது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம். – எனத் தெரிவித்தார்.

# கோட்டாபயவுடன் சுதந்திரக்கட்சி தனியான உடன்பாட்டுக்கு முயற்சி!



கொழும்பு, செப்.01

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரான கோட்டாபய ராஜபக்ஷவுடன் தனியாக புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றைச் செய்து கொள்ளவேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கோரியுள்ளது.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரான கோட்டாபய ராஜபக்ஷவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய தலைவர்களான மஹிந்த அமரவீர, தயாசிறி ஜயசேகர, லசந்த அழகியவன்ன ஆகியோர் வியாழனன்று சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இரண்டு கட்சிகளுக்கும் இடையில் கூட்டணி அமைப்பது குறித்து மஹிந்த ராஜபக்ஷவும் மைத்திரிபால சிறிசேனவும் பேச்சுக்களை நடத்தியமையைஅடுத்து இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

இதன்போது எதிர்கால ஒத்துழைப்புகள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன், கோட்டாபய ராஜபக்ஷவுடன் தனியான புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றைச் செய்து கொள்ள சுதந்திரக் கட்சியின் பிரதிநிதிகள் விருப்பம் வெளியிட்டுள்ளனர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ)

**நாளை** 02.09.2019 திங்கட்கிழமை

நட்சத்திரம்: அத்தம் பி.ப 1.55 வரை
திதி : திருதியை மு.ப 9.42 வரை
இராகுகாலம் : 7.35 – 9.05
சுப நேரம் : 12.05 – 1.35

விநாயகர்ச் சதுர்த்தி விரதம்

# மின்தடை

யாழ்ப்பாணம், செப். 01

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று ஞாயிறு காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை –

**மன்னார் பிரதேசத்தில் -**

உயிலங்குளம், கமலாம்பிகைஅரிசி ஆலை, முதலைக் குத்தி, வட்டுப்பித் தன்மடு, புதுகாமம், நொச்சிக்குளம், கள்ளிக்கட்டை காடு, சிறுநாவற்குளத்திலிருந்து தலைமன்னார் வரை, Timex ஆடைத்தொழிற் சாலை, மன்னார் வைத்தியசாலை, பூட் சிற்றி, மன்னார் நீர்ப்பாசனத் திணைக் களம், அரசாங்க அதிபர் அலுவலகம், ஆவே மரியா ஐஸ் தொழிற்சாலை, மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், Youth Crop பயிற்சி நிலையம், Palmyrah House, வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, தலைமன்னார் கடற்படைமுகாம், தலைமன்னார் வைத்தியசாலை, தள்ளாடி இராணுவமுகாம், டயலொக் தொலைத்தொடர்பு நிலையம் ஆகிய பிரதேசங்களிலும் –

நாளை 02.09.2019 திங்கள் காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.30 மணி வரை

**யாழ் பிரதேசத்தில் -**

வல்லை, உடுப்பிட்டி, பொக்கணை, தொண்டமானாறு, மயிலியதனை, சிதம்பரா, அக்கரை, வளலாய், Suganth Internantional காக்கைதீவு, வத்திராயன், உடுத்துறை, ஆளியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, முள்ளியன், கீவில் ஆகிய இடங்களிலும் –

மன்னார் பிரதேசத்தில் உயிலங்குளம், கமலாம்பிகை அரிசி ஆலை, முதலைக் குதத்தி, வட்டுப்பித்தன்மடு, புதுகாமம், நொச்சிக்குளம், கள்ளிக்கட்டைகாடு, செம்மண் தீவிலிருந்து நானாட்டான் வரை, அளவாக்கை, பள்ளங்கோட்டை, அச்சங்குளம், செம்மண்தீவு Ware House, நறுவிலிக் குளம், வங்காலை, தோமஸ்புரி, வங்காலை கடற்படை முகாம், வங்காலை நீர்ப்பாசன சபை ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப் பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

# சு.கவை விட்டு கட்சி தாவியோர் மீது ஒழுக்காற்று விசாரணைக்குத் தயார்

## செயலாளர் தயாசிறி எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு,செப்.01

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சிக்கும், பொதுஜன பெரமுனவுக்கும் சென்றவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை முன்னெடுக்கத் தேவையான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என அக்கட்சியின் செயலாளர் தயாசிறி எம்.பி. தெரிவித்தார்.

தனிநபர்களை எதிர்ப்பது எமது நோக்கமல்ல. கட்சியின் ஒழுங்குகளைப் பேணிப் பாதுகாப்பதே ஒழுக்காற்று விசாரணையின் நோக்கம். அடுத்த மத்திய செயற்குழுக் கூட்டத்தின் போது இது குறித்த இறுதித் தீர்மானம் எடுக்கவுள்ளதாகவும் அவர் கூறினார்.



ஒழுக்காற்று விசாரணையின் பின்னர் நாடாளுமன்ற உறுப்புரிமையிலிருந்து நீக்குவது குறித்து விசாரணைக் குழுவே தீர்மானிக்கும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# ஆவணிச் சதுர்த்தி திருவிழா

நல்லூர், செப். 01

நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த ஆவணிச் சதுர்த்தி திருவிழா நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 6.15 மணிமுதல் சகஸ்ர (1008)சங்காபிஷேகம், பஞ்சமுக அர்ச்சனையைத் தொடர்ந்து மதியம் 12 மணிக்கு மகேஸ்வர பூசையுடன் அன்னதானம் இடம்பெறும்.

மாலை 5 மணிக்கு கூட்டுப் பிரார்த்தனையை அடுத்து 6மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெற்று சுவாமி உள்வீதி, வெளிவீதி வலம் வருவார்.

தொடர்ந்து வருடாந்த உற்சவத்தின் போது நடைபெற்ற சைவ சமய அறிவுப் போட்டியில் சித்திபெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும். (இ)

# மேஜர் ஜெனரல்களாக அறுவருக்கு பதவியுயர்வு

இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த ஆறு பிரிகேடியர் தர அதிகாரிகள், மேஜர் ஜெனரல்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.


இராணுவத் தளபதியின் பரந்துரைகளுக்கமைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தப் பதவி உயர்வை வழங்கியுள்ளார்.

பிரிகேடியர் டி.ஆர்.தர்மசிறி, பிரிகேடியர் ஜே.எம்.யு.டி. ஜயசிங்க, பிரிகேடியர் சிகே ஹந்துன்முல்ல, பிரிகேடியர் ஏ.டி எல்வத்த, பிரிகேடியர் சுமித் அத்தபத்து ஆகியோர், 2019 ஜூலை 30 ஆம் திகதியில் இருந்து மேஜர் ஜெனரலாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

பிரிகேடியர் ஏ.ஐ. மாரசிங்க, 2019 ஓகஸ்ட் 15ஆம் திகதியில் இருந்து தற்காலிக மேஜர் ஜெனரலாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

பதவி உயர்த்தப்பட்டுள்ள அதிகாரிகளில், இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்துவும் உள்ளடங்கியுள்ளார்.

# நல்லூர் ஆலய சூழலில் இன்று



*யாழ்ப்பாணம், செப். 01*

*இலங்கை இளங் கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவத்தையொட்டி நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடத்தும் தெய்வீக இசையரங்கில் -*

*இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.45 மணி முதல் 8.15 வரை இசை நாடகம் -*

*யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகம் தயாரித்து வழங்கும்* **“பக்தநந்தனார்”**

*ஹார்மோனியம் - கே. தவனேஸ், மிருதங்கம் - க.முருகையா.* (இ)

# முன்னாள் கல்வி அதிகாரி கிளிநொச்சி விபத்தில் பலி

கிளிநொச்சி பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

வட்டக்கச்சி மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபரும், ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளருமான கோ. செல்வராஜா என்பவரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த விபத்து சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



# யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில்

# வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம், செப். 01

யாழ் மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள யாழ்நகர், பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி (AVR) கீழ்வரும் இடங்களில் வைத்து வழங்கப்படவுள்ளது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பு ஊசியை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

வளர்ப்பு நாய்களுக்கான உரிமக்கட்டணமாக 30 ரூபா செலுத்தப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த வகையில் நாளை 02 ஆம் திகதி –

* 9.00 மணி முதல் 11.00 வரை – முத்தமிழ் வீதி பாலர் பாடசாலை
* 11.00 முதல் 1.00 வரை – மீனாட்சி அம்மன் கோவிலடி
* 2.30 முதல் 4.00 வரை – நமசிவாயம் பாடசாலை முன்பாக

நாளை மறுதினம் 03 ஆம் திகதி –

* 9.00 மணி முதல் 11.00 வரை – கூழாவடி வைரவர் கோவிலடி
* 11.00 முதல் 1.00 வரை – ரிம்பர் ஹோல்
* 2.30 முதல் 4.00 வரை – சிறாம்பியடி சனசமூக நிலையம்

எதிர்வரும் 04 ஆம் திகதி –

* 9.00 மணி முதல் 11.00 வரை – பலாலி வீதி 2ஆம் ஒழுங்கை
* 11.00 முதல் 1.00 வரை – யாழ் வீதி
* 2.30 முதல் 4.00 வரை – பெருமாள் கோவிலடி


## ஆசிரியர் வே. அன்பழகன் அவர்களின்

**தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2020**
**வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன**

யாழ்ப்பாணத்தில்
**அன்பொளி கல்வியகம்**
யாழ். இந்துக்கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

சாவகச்சேரியில்
**அன்பொளி கல்வி நிலையம்**
தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

அனுமதிகளை 31.08.2019 சனிக்கிழமையிலிருந்து 06.09.2019 வெள்ளிக்கிழமை வரை பிற்பகல் 2.00 மணி தொடக்கம் பிற்பகல் 6.00 மணிக்குள் முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

குறிப்பு :- பெற்றோர் கலந்துரையாடலுடன் வகுப்புக்கள் ஆரம்பிப்பது பற்றிய மேலதிக விவரங்கள், நேர அட்டவணை நேரில் வழங்கப்படும்.

*சின்ன விழி அசைத்துச் சிரித்துவரும் சித்திரங்களை அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடனே ஊட்டிடுவோம்.*

**இயக்குநர்கள்**

# கர்நாடக மாநிலத்தில் மாட்டிறைச்சிக்கு தடை

## அமைச்சர்களுடன் எடியூரப்பா ஆலோசனை

**பெங்களூரு,செப்.01 கர்நாடகாவில் மாட்டிறைச்சி விற்பனை செய்வதற்குத் தடை விதிக்க முதல்வர் எடியூரப்பா தலைமையிலான பா.ஜ.க. அரசால் திட்டமிடப்பட்டுள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது.**



கர்நாடகா பா.ஜ.கவின் பசு பாதுகாப்பு பிரிவுத் தலைவர் சித்தார்த் கோயங்கா தலைமையிலான குழுவினர் அண்மையில் முதல்வர் எடியூரப்பாவைச் சந்தித்து மனு ஒன்றைக் கையளித்தனர்.

அந்த மனுவில் பசுவைக் கொல்வதற்கும், மாட்டிறைச்சி விற்பனை செய்வதற்கும் தடை விதிக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதையடுத்து, மாட்டிறைச்சிக்குத் தடை விதிப்பது குறித்து அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் எடியூரப்பா ஆலோசனை நடத்தியுள்ளார்.

இதுகுறித்து சுற்றுலா மற்றும் கன்னட கலாசாரத்துறை அமைச்சர் சி.டி.ரவி கூறுகையில்–

கர்நாடகாவில் கடந்த 2010 ஆம் ஆண்டு பா.ஜ.க. ஆட்சியின் போது மாட்டிறைச்சிக்குத் தடை விதித்து பிரேரணை தாக்கல் செய்யப்பட்டது. இந்தப் பிரேரணை சித்தராமையா தலைமையிலான காங்கிரஸ் அரசு திரும்ப பெற்றுக் கொண்டது.

மீண்டும் பா.ஜ.க. ஆட்சி அமைந்துள்ளமையால், மாட்டிறைச்சிக்குத் தடை விதிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து அறிவிப்பு வெளியிடுவதற்கு முன்பு 6 பேர் கொண்ட குழு அமைக்கப்பட உள்ளது. இந்தக் குழு, மாட்டிறைச்சிக்கு தடை விதித்துள்ள மாநிலங்களுக்கு சென்று, அங்கு இதை தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள வழிமுறைகளை ஆய்வு செய்வார்கள். அந்த குழு அளிக்கும் அறிக்கையின் படி அரசு நடவடிக்கை எடுக்கும். – இவ்வாறு அவர் தெரிவித்தார்.

(உ)

# மாணவர்களை பேராசிரியர்கள் வீடுகளுக்கு அழைக்கக் கூடாது

## சென்னை பல்கலைக்கழகம் அறிவிப்பு

சென்னை, செப் 02

மாணவ, மாணவிகளைத் தங்கள் வீடுகளுக்கு எந்தக் காரணங்களுக்காகவும் பேராசிரியர்கள் அழைக்கக் கூடாது என சென்னைப் பல்கலைக்கழகம் சுற்றறிக்கை அனுப்பியுள்ளது.




சென்னை பல்கலைக்கழகம் சுற்றறிக்கை ஒன்றை பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு அனுப்பியுள்ளது. இதில் பல்கலைக்கழக நிர்வாகம் குறிப்பிட்டிருப்பதாவது:–

பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள் தங்கள் வீடுகளுக்கு அழைத்தால் மாணவ,மாணவியர்கள் அங்கு செல்லக்கூடாது. அப்படியொரு நிலை ஏற்பட்டால் மாணவர்கள் நிர்வாகத்திடம் உரிய அனுமதிகோர வேண்டும். பேராசிரியர்களும் அழைப்பு விடுக்கக் கூடாது.

பாலியல் தொந்தரவு அற்ற வளாகமாக மாற்றும் முயற்சி இது. பாலியல் தொந்தரவு இருந்தால் பல்கலைக்கழக பேராசிரியை ரீட்டா ஜான் தலைமையிலான குழுவிடம் எழுத்துப்பூர்வமாக தெரிவிக்க வேண்டும்.

மாணவர்கள் தரப்பிலோ, பேராசிரியர்கள் தரப்பிலோ தவறு இழைக்கப்பட்டிருக்கும் பட்சத்தில் நிச்சயம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். – இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ)

# இறந்த ஏழை புரோகிதர் வீட்டில் மூடை மூடையாக நோட்டுக்கள்

## இயந்திரம் மூலம் பணத்தை எண்ணிய உறவினர்கள்



உயிரிழந்த ஓர் ஏழை புரோகிதர் வீட்டில் மூடை, மூடையாக பணம் இருந்ததை பார்த்த அவரது உறவினர்கள் திகைப்பும் அதிர்ச்சியும் அடைந்தனர்.

ஆந்திர மாநிலம், கிழக்கு கோதாவரி மாவட்டம், துனி பகுதியை சேர்ந்தவர் சுப்ரமணியம் (வயது70). இவர் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு வரை அதே பகுதியில் உள்ள கோயிலில் பணியாற்றி வந்துள்ளார். ஆனால் உடல் நிலை சரியில்லாத காரணத்தினால் இவர் தொடர்ந்து பணியாற்ற இயலவில்லை. மேலும், இவரது மனைவியும் கடந்த சில ஆண்டுகளுக்கு முன் உயிரிழந்தார். இவருக்கு ஒரு மகன் உள்ளார். இவர் அனகாபள்ளியில் தனது குடும்பத்தாருடன் வசித்து வருகிறார்.

இந்நிலையில், தான் பணியாற்றிய துனி பகுதியில் உள்ள பாழடைந்த ஒரு வீட்டில் வசித்து வந்த சுப்ரமணியத்திற்கு சிலர் உண்ண உணவும், பண மும் கொடுத்து உதவி செய்து வந்தனர் எனக் கூறப்படுகிறது. இதனிடையே சுப்ரமணியம் உடல் நலம் குன்றி கடந்த வியாழக்கிழமை உயிரிழந்தார்.

இவரது மரணம் குறித்து இவரது மகன் மற்றும் உறவினர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன்படி, அனைவரும் வந்து இறுதிச் சடங்குகளை செய்தனர். அதன் பின்னர், வீட்டைச் சுத்தம் செய்யும் போது மூடைகளில் கட்டு, கட்டாகப் பணம் இருந்தது. அவரது உறவினர்கள் திகைப்பும் அதிர்ச்சியும் அடைந்தனர். அப் பணத்தை பணம் எண்ணும் இயந்திரத்தை கொண்டு வந்து எண்ணினர். அப்போது ரூ. 5 லட்சத்திற்கும் அதிகமாக பணம் இருந்தது தெரியவந்தது.

# தொழிற்சாலையில் வெடிவிபத்து மகாராஷ்டிராவில் எண்மர் சாவு!

மும்பாய்,செப்.01

மகாராஷ்டிர மாநிலம் துலே என்ற இடத்தில் ஓர் இரசாயன தொழிற்சாலையில் காஸ் சிலிண்டர் வெடித்து தீவிபத்து ஏற்பட்டது.இதில் 8 பேர் பலியாகி இருக்கலாம் என முதல் கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.



இந்தத் தொழிற்சாலையில் 100 இற்கும் மேற்பட்டவர்கள் வேலை பார்த்து வந்தனர் எனக் கூறப்படுகிறது. தொழிற்சாலையைச் சுற்றிலும் கரும் புகையாகக் காணப்படுகிறது. தீயை அணைக்க சுற்று வட்டாரத்தில் இருந்து தீயணைக்கும் படைகள் விரைந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தன.

இந்த விபத்தில் 8 பேர் பலியாகி இருக்கலாம் என கூறப்படுகிறது. இதுவரை 8 பேரின் உடல்கள் மீடகப்பட்டு உள்ளன எனத் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# இந்தியாவுக்கு வருகின்ற வெளிநாட்டினர் மருத்துவ விசா இன்றி சிகிச்சை பெறலாம்

## – உள்துறை அமைச்சகம் அறிவிப்பு –



புதுடில்லி,செப்.01

மருத்துவ விசா இல்லாமல் வெளிநாட்டினர் இந்தியாவில் மருத்துவ சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம் என்று உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மட்டும் பெற இயலாது என்றும், ஏற்கனவே நோயால் பாதிக்கப்பட்ட வெளிநாட்டவர்கள் தாம் ஏற்கனவே வைத்துள்ள முதன்மை (அசல்) விசாவின் மூலம் இந்தியாவில் சிகிச்சைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் உள்துறை அமைச்சகம் அதன் அறிக்கையில் கூறியுள்ளது.

ஏற்கனவே செல்லுபடியாகும் விசாக்களைக் கொண்டுள்ள சில வெளிநாட்டவர்கள் இந்தியாவில் தங்கியிருந்த காலங்களில் நோய்வாய்ப்பட்டு மருத்துவ சிகிச்சை பெறுவதில் பல சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றமையால் இந்த முடிவு எடுக்கப்பட் டுள்ளதாகக் கூறப்படுகிறது.

சிறிய நோய் மற்றும் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ள வெளிநாட்டவருக்கு மருத்துவ ஆலோசனை அல்லது சிகிச்சை மட்டும் தேவை என்ற பட்சத்தில் முதன்மை விசா மூலம் எந்தவொரு மருத்துவமனையையும் அணுகி சிகிச்சைப் பெற்றுக்கொள்ளலாம் என்று உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# புளோரிடாவை சூறையாட தயாராகும் டொரியன் புயல்!

மக்களை வெளியேற்றுவது குறித்து முடிவு இன்று



அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தை மிரட்டிக் கொண்டிருக்கும் டொரியன் புயலுக்கு முன்னெச்சரிக்கையாக மக்களை வெளியேற்றுவது குறித்து இன்று முடிவு எடுக்கப்படும் என்று அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

பலத்த சூறைக்காற்றுடன் புயல் காரணமாக கனமழையும் கொட்டி வருவதால் வரும் நாள்களில் அது கரையைக் கடக்கும் போது மிகப்பெரிய சேதத்தை அது ஏற்படுத்தும் என்று கணிக்கப்பட்டுள்ளது.பஹாமாஸ் தீவுகளின் வடமேற்கு பகுதியில் அது மையமிட்டு புளோரிடா தீபகற்பத்தை நோக்கி நகர்ந்து வருகிறது. புயல் வலுப்பெற்று வருவதால் பலத்த காற்றுடன் அது கரையைக் கடந்து மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்று வானிலை வல்லுநர்கள் கூறுகின்றனர்.

மக்கள் வீடுகளுக்குள் அடைந்து கிடப்பதோடு கதவுகள் ஜன்னல்களை மூடிவைத்துள்ளனர். உணவுப்பொருள்கள், குடிதண்ணீர்,சமையல் எரிவாயு, ஜெனரேட்டர்கள் போன்றவற்றை தேவையான அளவுக்கு சேகரித்து வைத்துள்ளனர். ஒரு வாரத்திற்குத் தேவையான கையிருப்பை வைத்திருக்குமாறு புளோரிடா ஆளுநர் அறிவுறுத்தியுள்ளார். புயல் காரணமாக புளோரிடாவில் அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

# பஸ் பள்ளத்தில் விழுந்ததில் பாகிஸ்தானில் 24 பேர் பலி!

இஸ்லாமாபாத்,செப்.01

பாகிஸ்தானின் கைபர் பக்துன்வா மாகாணத்தில் பள்ளத்தில் பஸ் கவிழ்ந்து விழுந்ததில் ஒரே குடும்பக் குழுமத்தைச் சேர்ந்த 24 பேர் பரிதாபமாகப் பலியாகினர்.



பாகிஸ்தான் நாட்டின் கைபர் பக்துன்வா மாகாணத்தில் 35க்கும் மேற்பட்ட பயணிகளுடன் பஸ் ஒன்று நேற்றுமுன்தினம் இரவு சென்று கொண்டிருந்தது.

அப்போது பாக்ரா என்ற பகுதியில் வரும்போது கட்டுப்பாட்டை இழந்த பஸ் திடீரென அருகிலுள்ள பள்ளத்தில் கவிழ்ந்து விழுந்தது. இந்த விபத்தில் 24 பேர் பலியாகினர். மேலும் பலர் படுகாயம் அடைந்தனர்.

பாதையின் பாலம் பழுதடைந்திருந்தமையே விபத்துக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

தகவலறிந்து சம்பவ இடத்துக்கு சென்ற மீட்புக் குழுவினர் காயமடைந்தவர்களை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து உடல்களை மீட்கும் பணி நடைபெற்று வருகின்றது என மீட்புக் குழு அதிகாரிகள் தெரிவித்தனர்.

# மூவாயிரம் ஆண்டுகள் பழைமை வாய்ந்த மனித எலும்புகள் ஏமனில் கண்டுபிடிப்பு!



ஏமனில் 3 ஆயிரம் ஆண்டுகள் பழைமைவாய்ந்த மனித எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஏமன் தலைநகர் சனாவில், மம்மிகள் குறித்து தொல்லியலாளர்கள் ஆய்வு நடத்தி வந்தனர். இதில் 3 ஆயிரம் ஆண்டுகள் பழைமை வாய்ந்த மனித எலும்புகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

ம்லான் எனப்படும் மலைத் தொடரில் புதையல் இருப்பதாக நம்பி, மம்மிகள் வைக்கப்பட்ட பெட்டிகளை உடைத்து மர்மநபர்கள்எலும்புகளைஎடுத்திருக்கலாம் என்றும் அவற்றில் ஒருசில தற்போது கிடைக்கப்பெற்றுள்ளன எனவும் கூறப்படுகிறது.

கண்டெடுக்கப்பட்டஎலும்புகள் தாடை, தொடை பகுதிகளைச் சேர்ந்தவை எனக் கண்டறியப்பட்டுள்ளன. 2 ஆயிரத்து 500 ஆண்டு காலம் பழைமை யான, வரலாற்று சிறப்புமிக்க சனா நகரம் பிற்காலத்தில் போர்கள் மூலம் சிதைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# 26 ஆண்டுகள் கழித்து வந்த தபால் அட்டை அதிர்ச்சி அடைந்த கடிதத்தின் உரிமையாளர்

பிரான்ஸ் நாட்டில் 26 ஆண்டுகளுக்கு முன்பு அனுப்பப்பட்ட தபால் அட்டை ஒன்று தற்போது சரியான விலாசத்திற்கு வந்தடைந்த சம்பவம் ஆச்சரியப்பட வைத்துள்ளது.

பிரான்ஸ் நாட்டின் வியக்ஸ் பவுக்காவ் என்ற நகரில் வசிக்கும் குயிட்டரி டாரியோ என்ற பெண் தனது வீட்டில் இருக்கும் தபால் பெட்டியை திறந்துள்ளார். அதில் புதியதாக தபால் ஒன்று வந்திருப்பதை அந்தப் பெண் பார்த்துள்ளார். தபாலில் விவரத்தை பார்த்த அவருக்கு ஒரு நிமிடம் தலை சுற்றியது.




அந்த தபால் நான்ஸி என்னும் நகரில் இருந்து 1993 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி அனுப்பப்பட்டுள்ளது. ஏறக்குறைய 26 ஆண்டுகளுக்கு முன்னர் அனுப்பப்பட்ட அந்த தபால் தற்போது கிடைத்துள்ளதை நினைத்து அந்த பெண் அதிர்ச்சி அடைந்தார்.

இதில் மேலும் சுவாரசியமான விடயம் என்னவென்றால் 26 ஆண்டுகள் ஆகியும் அந்த தபால் அட்டை கிழியவோ அல்லது பழையதாகவோ ஆகாமல் பார்ப்பதற்கு புதிதாகவே இருந்துள்ளது. வீட்டின் முகவரி மாறி இருந்ததால் ஏற்பட்ட குழப்பமே இந்த சம்பவத்திற்குக் காரணம் என கூறப்படுகிறது.

# அமேசான் காட்டுத் தீயை அணைப்பதற்கு அமெரிக்க உதவியை நாடியுள்ள பிரேசில்


பிரேசிலியா,செப்.01

அமேசான் காடுகளில் ஏற்பட்டுள்ள தீயை அணைக்க ஜி7 நாடுகள் உதவ முன்வந்த போது அதை நிராகரித்த பிரேசில் நாடு, தற்போது அமெரிக்காவின் உதவியை நாடியுள்ளது.

உலகின் மிகப்பெரிய மழைக் காடுகளான அமேசானில் கடந்த சில நாள்களாக பயங்கரக் காட்டுத் தீ பரவி வருகிறது. தொடர்ந்து பரவி வரும் இந்தக் காட்டுத்தீயால் உலக நாடுகள் மிகப்பெரும் அதிர்ச்சியில் உறைந்துள்ளன.

அமேசான் காடுகளின் 60 சதவீத பகுதி பிரேசில் நாட்டில் இருந்தாலும், பொலிவியா, கொலம்பியா, வெனிசூலா உள்ளிட்ட வேறு 8 நாடுகளிலும் இந்தக் காடுகள் பரவிக் கிடக்கின்றன. இந்தக் காட்டுத்தீயை கட்டுப்படுத்த உதவுமாறு உலக நாடுகளுக்கு கொலம்பியா அரசு வேண்டுகோள் விடுத்திருந்தது.

இதையடுத்து சமீபத்தில் நடந்த ஜி7 மாநாட்டில், ஜி7 அமைப்பின் உறுப்பு நாடுகளின் தலைவர்கள் அமேசானில் பரவி வரும் காட்டுத் தீயை அணைக்க சுமார் 160 கோடி டொலர் வழங்கப்படும் என அறிவித்தனர்.



இந்த அறிவிப்பை பிரேசில் நாடு நிராகரித்தது. மேலும் அமேசான் மழைக்காடுகளில் ஏற்பட்டுள்ள தீயை அணைக்க ஜி7 நாடுகளின் உதவி தேவையில்லை எனத் திட்டவட்டமாக கூறியிருந்தது.

இந்த நிலையில் அமேசான் காடுகளில் பரவிவரும் காட்டுத்தீயை அணைக்க ஜி7 நாடுகளில் ஒன்றான அமெரிக்காவின் உதவியை நாடியுள்ளது பிரேசில். இது குறித்து பேச்சு நடத்த பிரேசில் அதிபர் போல்சனரோ, தனது மகன் மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சர் ஆகியோரை வொஷிங்டன் அனுப்பினார்.

இதனையடுத்து பிரேசில் அதிபர் போல்சனரோவின் மகன் ஜெய்ர் போல்சனரோ மற்றும் அந்நாட்டு அதிகாரிகள் அமெரிக்க அதிபர் டிரம்பை நேற்றுமுன்தினம் சந்தித்தனர்.

அமேசான் காட்டுத்தீயை அணைக்க பிரேசில் அரசின் முயற்சி சிறப்பாக இருந்ததாக அமெரிக்க அதிபர் டிரம்ப் கூறியமையைச் சுட்டிக்காட்டிய போல்சனரோ, தற்போது அமெரிக்க அரசின் உதவியைக் கேட்டிருக்கிறார் எனக் கூறியுள்ளார்

# காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் மன்னாரில் வெள்ளியன்று ஆர்ப்பாட்டம்








இலங்கை அரசே உண்மையை மறைக்காதே. ஒரு நாள் உண்மை நிச்சயம் வெளிவரும் எனக் கூறி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கவனவீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோருக்கான தினமாகிய நேற்று முன்தினம் மன்னார் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

2009ஆம் ஆண்டு இறுதிப் போரின்போது இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டவர்கள் குறித்து அரசு உரிய பதிலை இன்னும் வழங்கவில்லை.

இந்நிலையில் இந்த நல்லாட்சி அரசு நிறைவடைவதற்குள், சர்வதேசத்தின் தலையீட்டுடன் நல்ல தீர்வு ஒன்றை வழங்கக் கோரியும் பல வருடங்களாகச் சந்தேகத்தின் பேரில் அரசியல் கைதிகளாக்கப்பட்ட தமிழ் இளைஞர்களை விடுவிக்கக் கோரியும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் மன்னார் மாவட்டம் முழுவதிலும் உள்ள காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் பெற்றோர்கள், உறவினர்கள், அருட்தந்தையர்கள், சமூக ஆர்வலர்கள், மன்னார் நகரசபைத் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டோர், 'நிலைமாறுகால நீதி எங்கே?', 'இலங்கை அரசே உண்மையை மறைக்காதே; ஒரு நாள் நிச்சயம் உண்மை வெளி வரும்', 'இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவே! காணாமல் ஆக்கப் பட்டவர்கள் தொடர்பாக அக்கறையில்லையா?', 'உறவுகள் காணாமல் போனவர்கள் அல்லர்; இவர்கள் இலங்கை இராணுவத் திடம் ஒப்படைக்கப்பட்டவர்கள்' உள்ளிட்ட பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் புகைப் படங்க ளைத் தாங்கியவாறு கோசங்களை எழுப்பி கண்ணீ ருடன் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

## தமிழர் மரபுரிமைப் பேரவையினர் 'எழுக தமிழ்' நிகழ்விற்கு ஆதரவு!

வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்கு கூட்டாக வலுச்சேர்க்கும் வகையில் தமிழ் மக்கள் பேரவையினால் முன்னெடுக்கப்படவிருக்கும் 'எழுக தமிழ் – 2019' எழுச்சிப் பேரணியில் அனைவரும் பங்கேற்பது என்ற அடிப்படையில் தமிழர் மரபுரிமைப் பேரவை அதற்கு ஆதரவை வழங்குவதாகத் தெரிவித்துள்ளது.

'எழுக தமிழ் – 2019' எழுச்சிப் பேரணி முன்னெடுப்புகளில் பங்காளர்களாக இணைந்து செயலாற்றுவது தொடர்பில் வடக்கு, கிழக்கில் செயல்பட்டுவரும் பொது அமைப்புகளுடன் தமிழ் மக்கள் பேரவை சந்திப்புக்களை மேற்கொண்டு வருகின்றது. அந்த வகையில் ஆரம்பம் முதலே 'எழுக தமிழ் – 2019' எழுச்சி நிகழ்விற்கு ஆதரவாக இருந்து வரும் தமிழர் மரபுரிமைப் பேரவை தரப்புடன் கலந்துரையாடப்பட்டதையடுத்து தமது ஆதரவை அத்தரப்பு தெரிவித்துள்ளது.

## தேர்தல் அறிவிக்கப்படும் வரையில் தேவையற்ற பிரசாரம் வேண்டாம்!

### கட்சியினருக்கு ரணில் அறிவுறுத்தல்

கொழும்பு,செப். 01

ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்படும்வரை அதுகுறித்துத் தேவையற்றபிரசாரங்களைசெய்யவேண்டாம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கடுமையான உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம்நடைபெற்ற விசேட சந்திப்பின் போதே அவர் இந்த உத்தரவை விடுத்தார்.

வேட்பாளர் விவகாரத்தில் கட்சியின் ஐக்கியத்தைப் பாதுகாத்து அனைவரும் ஒன்றிணைந்தே முடிவெடுக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டிய அவர், மத்திய செயற்குழு மூலமாக இது குறித்து முடிவெடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

எதிர்வரும் 6ஆம் திகதி மீண்டும் கூடி இந்த விவகாரம் பற்றி பேசி முடிவுக்கு வருவோம் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அமைச்சர்களான கபீர் ஹாஷிம், ரவி கருணாநாயக்க, மலிக் சமரவிக்ரம, மங்கள சமரவீர, விஜித அபேவர்தன, கயந்த கருணாதிலக்க, லக்ஷ்மன் கிரியெல்ல, அகிலவிராஜ் காரியவசம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஆகிய சிரேஷ்ட உறுப்பினர் கள் இந்த சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.



## கோட்டாபயவேதான் ஜனாதிபதி வேட்பாளர்

### மாற்றமில்லை என்கிறார் மஹிந்த

கொழும்பு, செப். 01

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவால் பரிந்துரைக்கப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷவின் ஜனாதிபதி வேட்பாளர் நியமனம் மாற்றப்பட மாட்டாதென எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் தெரிவித்தார்.

கொழும்பில் – பண்டாரநாயக்க ஞாபகாரத்த சர்வ தேச மாநாட்டு மண்டபத்தில் தேசிய மாணிக்க மற்றும் ஆபரணக் கண்காட்சி திறக்கப்பட்ட பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு அவர் பதிலளித்தார். அங்கு அவர் மேலும் கூறுகையில் –

சுதந்திரக் கட்சியுடன் பொதுஜன பெரமுன இணைவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இரு கட்சிகளின் அடையாளத்தையும் பாதுகாத்து எமது ஜனாதிபதி வேட்பாளரை வெல்ல வைக்க விரும்புகிறோம். சுதந்திரக் கட்சியுடனான எங்கள் கலந்துரையாடல்களும்,கோட்டாபய ராஜபக்ஷவுடன் அவர்கள் நடத்திய கலந்துரையாடல்களும் மிகவும் வெற்றிகரமாக உள்ளன.



இந்த அரசு ஏற்கனவே கோட்டாபய ராஜபக்ஷவுக்குப் பயந்துள்ளது. அதனால்தான் எங்களைத் தாக்கும் வேலைகளைச் செய்கின்றனர். இருப்பினும், சரியான வேட்பாளரைச் சரியான நேரத்தில் நாம் வழங்கினோம். ஜே.வி.பி யும் தனது வேட்பாளரை முன்வைத்தது. இருப்பினும் நெருக்கடி காரணமாக ஜனாதிபதி வேட்பாளரை ஐ.தே.க. அறிவிக்கவில்லை . இப்போது அவர்கள் தங்கள் கூட்டமைப்பின் யாப்பை முன்வைத்து நெருக்கடியை மறைக்க முயற்சிக்கின்றனர். – என்றார். (ஐ)

## வலிந்து காணாமலாக்கப்படும் விவகாரத்தில் இலங்கை நீண்ட வரலாற்றைக் கொண்டது!

### இப்படிச் சுட்டிக்காட்டுகின்றது ஐக்கிய நாடுகள் சபை

கொழும்பு, செப். 01

வலிந்து காணாமலாக்கப்படும் சம்பவங்களைப் பொறுத்த வரை இலங்கை மிக நீண்ட வரலாற்றைக் கொண்டிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

சர்வதேச வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டிருக்கும் அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் காணாமற்போனோருக்கான அலுவலகம் மாபெரும் பொறுப்பு ஒன்றைக் கொண்டிருக்கிறது. அவ்வலுவலகத்தின் சவால்மிக்க ஆணையை நிறைவேற்றுவதற்கு சம்பந்தப்பட்ட அனைத்து அரசநிறுவனங்களினதும் ஒத்துழைப்பு அவசியமாகும். நீண்டகால நோக்கிலான நிலைபேறான முயற்சிகளின் ஊடாகவே துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கானோருக்கான தீர்வையும், மீட்சியையும் அளிக்க முடியும் என்றும் ஐக்கிய நாடுகள் சபை சுட்டிக்காட்டியிருக்கிறது.

# ஊழல் செய்தவர் எனத் தெரிவிக்கப்பட்ட ஐங்கரநேசனை

## விக்னேஸ்வரன் பாதுகாக்கிறார் என டெனீஸ் குற்றச்சாட்டு



ஊழல் செய்தவர் என விசாரணைக் குழுவால் தெரிவிக்கப்பட்ட முன்னாள் வடக்கு மாகாண அமைச்சர் ஐங்கர நேசனை முன்னாள் முதலமைச்சர் தொடர்ந்தும் பாதுகாத்துத் தன்னருகில் கொண்டு திரிகிறார். இதனால் அவருடைய ஊழலுக்கும் முதல மைச்சருக்கும் தொடர்பு இருக்குமோ என்ற சந்தேகம் எழுவதாக முன்னாள் வடமாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

முதலமைச்சர் அவர்களுக்கு எதிரான நீதிமன்ற வழக்கு தொடர்பில் ஊடகவியலாளர் கேள்வி எழுப் பிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியவை வருமாறு: –

என்னைப் பழி வாங்க வேண்டும் என்ற நோக்கில் முதலமைச்சர் செயற்பட்டிருந்தார். பல விட்டுக் கொடுப்புக்களுக்கு தயாராக இருந்தேன்.

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த வடமாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அப்போதைய விவசாய அமைச்சர் ஐங்கரநேசனுக்கு எதிரான ஊழல் குற் றச்சாட்டு ஒன்றைக் கொண்டு வந்திருந்தார். அதன் மறுநாள் முழங்காவில் பகுதியில் எனது அமைச்சின் வேலைத்திட்டம் ஒன்றின் நிகழ்வில் பிரதம விருந்தினராக முதல மைச்சர் கலந்து கொண்டார். அன்று ஐங்கர நேசன் மீதான நிதி மற்றும் ஊழல் குற்றச் சாட்டு தொடர்பாக எந்தவொரு விசாரணை யும் மேற்கொள்ளாது அவரை பாதுகாக் கும் செயற்பாட்டில் முதலமைச்சர் ஈடுபட்டார்.

'அமைச்சர் ஐங்கரநேசன் மீது வீண் குற் றச்சாட்டு கொண்டு வரப்பட்டுள்ளது, பனங் காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது' என முதல்வர் அங்கு தெரிவித்திருந்தார்.



ஒரு நீதியரசராக இருந்தவர், வடமாகாணத்தை நிர்வகிக்கின்ற பொறுப்பில் இருப்பவர், வடமாகாண அமைச்சர்களை வழிநடத்துபவர், தனது குழாமில் உள்ள ஓர் அமைச்சருக்கு எதிராக அதே ஆளுக்கட்சி உறுப்பினர் குற்றச்சாட்டை முன்வைத்த போது அதனை விசாரணை செய்யாது, அது தொடர்பில் எந்தவித நடவடிக்கையும் எடுக்காது எவ்வாறு பனங் காட்டுநரி சலசலப்புக்கு அஞ்சாது எனக் கூற முடியும்?

ஐங்கரநேசன் மீது குற்றச்சாட்டு வந்ததில் இருந்தே அவரைப் பாதுகாக்க வேண்டும் என்றுதான் முதல மைச்சர் முயன்றார். ஐங்கரநேசன் மீதான குற்றச் சாட்டைத் தொடர்ந்து முதலமைச்சர் ஒரு விசாரணை குழுவை நியமித்தார். அப்போது எனக்கு எதிராகவும், அமைச்சர் சத்தியலிங்கத்துக்கு எதிராகவும் அப்போது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படவில்லை. இந் நிலையில் எனக்கு எதிராக எவ்வாறு விசாரணை குழுவை அமைக்க முடியும்? குற்றச்சாட்டு வந்த பின் தான் விசாரணை குழு அமைக்கப்படுவது வழமை. மத்திய அரசிலும் அதுதான் நடைமுறை. ஆனால் முதலமைச்சர் இங்கு ஏன் அவ்வாறு நடந்து கொண் டார்?

2016 ஆம் ஆண்டு டிசம்பர் 5 ஆம் திகதிதான் என்மீது முதன் முதல் குற்றச்சாட்டு முன்வைக்கப் பட்டது. அதுவும் விசாரணை குழு அமைத்த பின்னர் அக்குழுவிடம் முன்வைக்கப்பட்டது.

வெலிஓயாப் பகுதியில் இருக்கின்ற சிங்கள குடும்பங்கள் வாழும் பகுதியில் உள்ள குளம் ஒன்றில் மீன்குஞ்சு விடப்பட்டமையில் மோசடி செய்தேன் என்றும், வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது பஸ் தரிப்பிடம் அமைக்கும் போது மோசடி இடம்பெற் றது எனவும், மாவீரர் போராளிகளுக்கான வேலைத் திட்டத்தில் ஊழல் நடந்தது என்றும் குற்றச்சாட்டுகளை மாகாணசபை உறுப்பினர் அனந்தி சசிதரன் முன் வைத்திருந்தார்.

ஆனால், நான் அந்த விசாரணைக்கு சென்றி ருந்தேன். என்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கான அனைத்து பதில்களையும் வழங்கியிருந்தேன்.

ஒவ்வொரு வருடமும் எனது மீன்பிடி அமைச்சுக்கு 3 கோடி ரூபா தொடக்கம் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. அதில் 5 – 6 லட்சம் ரூபா முல்லைத்தீவு மாவட்டத்தில் இருக்கின்ற சிங்கள கிராமத்திற்கு வழங்கினேன்.

அவ்வாறு நான் செய்தது பிழை என்பதுதான் முதலா வது குற்றச்சாட்டு. அந்த சிங்கள குடும்பங்கள் எமது வடமாகாணத்தில் இருக்கின்ற மக்கள். நான் வட மாகாணத்தில் இருக்கின்ற மூவின மக்களுக்கும் அமைச்சர்தான். அவர்களுக்கு செய்யக் கூடாது என்று ஒரு மாகாண சபை உறுப்பினர் செய்த முறைப் பாடுதான் அது. எமது மாகாணத்தில் சிறுபான்மை யாக சிங்கள மக்கள் இருக் கின்ற ஒரு மாவட்டத்தில் ஒரு 100 தொடக்கம் 200 பேர் வரையில் சிங்கள மக்கள் வசிக்கும் நிலையில் அந்த கிராமத்திற்கு நான் உதவி செய்யக் கூடாது எனில், மத் திய அரசாங்கம் வடக்கு – கிழக்கு மாகாணத்திற்கோ அல்லது தமிழ் மக்களுக்கோ உதவி செய்யவில்லை என்று எப்படி கேட்க முடியும்?



அப்படிப் பார்த்தால், அவர் கள் எம்மை அடக்கி ஆள்வது சரி. இதற்கு நான் விசாரணை குழுவில் சரியான விளக்கம் கொடுத்துள்ளேன்.

அதேபோல் மாவீரர் போரா ளிகள் குடும்பங்களுக்கும், ஒதுக்கப்பட்ட நிதிகளில் ஒரு ரூபா என்றாலும் நான் எடுத்தேன் என்று நிரூபியுங்கள், நான் அரசியலில் இருந்து ஒதுங்கு கிறேன் என்றேன்.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதி அந்த நிதிப் பிரமாணங்களுக்கு அமைய வீதி அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்கள் ஊடா



கவே செலவு செய்யப்பட்டது.

இவை எல்லாவற்றுக்கும் நான் சரியாக பதில் அளித்த பின்னரும் எனக்கு எதிரான பாரதூரமான குற்றச்சாட்டுக்களைத் தொடுத்த உறுப்பினர் அனந்தி சசிதரன் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

என் மீது விசாரணை இடம்பெற்ற போது யாழ் நூலகத்திற்கு அருகில் உள்ள ஓர் இடத்தில் அனந்தி சசிதரன் நின்றிருந்தார். தான் கொடுத்த ஒரு முறைப் பாட்டுக்கு முகம் கொடுத்து அதனை நிரூபிக்க முடியாத அளவுக்கு தள்ளப்பட்டு விசாரணை குழு பல தட வைகள் அவருக்கு அறிவித்தல் கொடுத்தும், அவர் விசாரணை குழு முன் தோன்றவில்லை. இவ்வாறு பிழை செய்த ஒருவர் தொடர்பில் முதலமைச்சர் எடுத்த நடவடிக்கை என்ன? அவருக்கு அமைச்சுப் பொறுப்பு கொடுத்தமைதான். இந்த விடயத்தில் நீதி, நியாயமாக முதலமைச்சர் நடந்தாரா எனக் கேட்டால் சிறு துளி கூட அவ்வாறு நடக்கவில்லை என சிறு பிள்ளை கூடச் சொல்லும்.

ஓர் அமைச்சர் மீது குற்றச்சாட்டை சொல்லி விட்டு விசாரணை குழுவில் கலந்து கொள்ளாமல் இருந் தமைக்கு சட்ட நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். ஆனால் மாறாக அமைச்சுப் பதவி கொடுத்து மகிழ் வித்துள்ளார்.

நீதிமன்றத்திற்கு செல்ல வேண்டும். முதலமைச்சரை தண்டிக்க வேண்டும் என்பது எல்லாம் எனது நோக்கமல்ல. ஆனால் இவ்வாறு அடாவடியாக நீதிதவறியமையால்தான் நான் நீதிமன்று சென்றேன்.

நான் அமைச்சை ஏற்க மாட்டேன், இடைக்காலத் தடை யுத்தரவை நடைமுறைப்படுத் துங்கள் என விட்டுக் கொடுப் புக்கும் சென்றேன். மீள அமைச் சுப் பொறுப்பை ஏற்று அன்றைய தினமே இராஜினாமா செய்கின்றேன் என்றும் கூறினேன். மாவீரர் போராளி களுக்கான உதவித்திட்டத்தை முன் னெடுங்கள், இணைந்த நேர அட்ட வணையை நடைமுறைப்படுத்துங்கள் ஆகிய இரண்டு கோரிக்கைகளையும் இதன்போது முன்வைத்தேன். 2016 ஆம் ஆண்டில் இருந்து முதலமைச்சர் ஒரு பிழையான பாதையில் நகரப் புறப்பட்டு விட்டார். அவரைப் பிழை யானவர்கள் பிழையாக வழிநடத்த ஆரம்பித்து விட்டார்கள்.

அத்துடன் முதலமைச்சர் அமைத்த குழுவின் விசாரணை முடிவில் வடமாகாண மீன்பிடி, போக்கு வரத்து அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சு என்ப வற்றில் எந்தவித முறைகேடும் இல்லை, அவர்கள் விடுவிக்கப்படுகிறார்கள், அவர்களது வேலைத் திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுங்கள் என விசாரணைக் குழு அறிக்கையில் கூறப்பட்டது. முதலமைச்சர் அதைச் செய் தாரா?

ஊழல் குற்றம் இழைத்தார் கள் என இரண்டு அமைச்சர் களை விசாரணை குழு குறிப் பிட்டது. அவர்களை நீக்குவது மட்டுமல்ல, எவ்வளவு நிதி எடுத் தார்களோ அதன் இரண்டு மடங்கு நிதியைத் திருப்பி வழங் கச் செய்திருக்க வேண்டும். சட்ட ரீதியாக அவர்களுக்குரிய தண்டனை வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

முதலமைச்சர் நியமித்த குழுவினால் ஊழல் செய்தார் என நிரூபிக்கப்பட்ட ஒருவர் ஐங்கரநேசன். பாதீடு தொடர்பான உரையின்போது வடமாகாணத்தில் ஊழலை ஒழித்ததாக முதலமைச்சர் மார்தட்டிச் சொன் னார். ஊழல் செய்த அமைச்சரை இன்று தனக்கு அருகில் வைத்து வேலைத்திட்டம் செய்கிறார். நடந்த ஊழலுக்கும், முதலமைச்சருக்கும் சம்பந்தம் இருக்கி றதா? ஊழலற்ற மாகாண சபையை உருவாக்கினார் என மார்தட்டிச் சென்ன முதலமைச்சர் ஏன் ஊழல் செய்த ஓர் அமைச்சரைத் தன்னருகில் வைத்தி ருக்கின்றார்? அவர் நியமித்த விசாரணைக் குழு ஊழல்செய்ததாகதெரிவித்தது. அதனடிப்படையிலேயே அவரே அந்த அமைச்சரைப் பதவி விலக்கினார்.

இன்று அவரைத் தனக்கு அருகாமையில் இரவு பகலாகக் கொண்டு திரிகிறார். ஆகவே தொடக்கம் முதல் இன்று வரை முதலமைச்சர் பிழையாகவே நகர்கிறார். முதலமைச்சர் நீதியரசராக இருந்து நீதி தவறியிருக்கிறார். அவர் செய்தவை பிழையான விடயம் என்பது இன்று நீதிமன்றத்தின் ஊடாக நிரூ பிக்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் இதற்கு எதிராக மேன்முறையீடு செய்ய வேண்டும். நான் அதற்கு எதிராகவும் போராடி, எனது நிலைப்பாட்டில் உறுதி யாகவிருந்து, அங்கும் முதலமைச்சர் பிழையாக நடந்திருக்கின்றார் என்பதை உறுதிப்படுத்தி வெற்றி பெறுவேன். – எனத் தெரிவித்தார். (உ)




இப்படியும் மாயாஜாலம்

# சுற்றிச் சுழன்று வந்த 500 ரூபா!

ஓர் உணவக உரிமையாளரின் மருமகன் 500 ரூபாய்த் தாள் ஒன்றை உண்மையான பணத்தாள் போல தத்ரூபமாக பிரதி செய்து கொண்டான்.

பிரதி பண்ணிய 500 ரூபாய் தாளைப் பணப்பையில் வைத்துக் கொண்டு தனது மாமாவின் உணவகத்திற்குப் போனான்.

காசாளர் மேசையில் இருந்த மாமாவுடன் சிறிது நேரம் பேசிவிட்டு பையிலிருந்த போலி 500 ரூபாய்த் தாளை எடுத்து மாமாவிடம் கொடுத்து மாமா இதைக் கொஞ்சம் வைத்துக் கொள்ளுங்கள் நான் பிறகு வந்து வாங்கிக் கொள்கிறேன். என்று சொல்லி அவரிடம் கொடுத்து விட்டு போய்விட்டான்.

சிறிது நேரம் கழித்து உணவகத்துக்குப் பால் வழங்குபவர் தனக்கு ஒரு 500 ரூபாய் அவசரமாக வேண்டியிருக்கிறது. தனக்கு வர வேண்டிய பால்பணத்தில் கழித்துக் கொள்ளலாம் என்று சொல்லி முதலாளியிடம் பணம் கேட்கிறார். அந்நேரம் 500 ரூபாய் சேரவில்லை.

சிறிது நேரம் யோசித்த முதலாளி தனது மருமகன் கொடுத்துவிட்டு சென்ற 500 ரூபாயைப் பால்காரரிடம் கொடுக்க அந்தப் பணத்தை வாங்கிக் கொண்டு பால்காரர் சென்று விடுகிறார்.

மருமகன் வருவதற்குள் வியாபாரத்தில் 500 ரூபாய் தேற்றிவிட முடியாதா என்ற நம்பிக்கையில் தான் அந்த பணத்தை எடுத்து பால்காரரிடம் கொடுத்து விட்டார் உணவக உரிமையாளர்.

உணவகத்தில் இருந்து 500 ரூபாயை வாங்கி சென்ற பால்காரர் நேராக தனது மனைவிக்குப் பிரசவம் பார்த்த வைத்தியரைச் சந்தித்து அவருக்குக் கொடுக்க வேண்டிய 500 ரூபாயைக் கொடுக்கிறார்.

வைத்தியரும் அந்தப் பணத்தை வாங்கிக் கொள்ள அங்கு இருந்த தனது கார்ச் சாரதியிடம் அந்தப் பணத்தைக் கொடுத்து பஜாரில் இருக்கிற தையல்காரர் கடையில் பழைய பாக்கிக்கு இந்த 500ரூபாய் பணத்தை கொடுத்துவிட்டு பிள்ளைகளுக்கு எடுத்து வைத்திருக்கும் புது துணிகளை தைக்க அளவெடுக்க வரச் சொல்லவும் என்று சொல்லி தையல் கடைக்கு அனுப்புகிறார் வைத்தியர்.

தையல் கடைக்குப் போய் டாக்டர் அம்மா வீட்டு பாக்கிக்கு இந்த 500 ரூபாயை வாங்கிக் கொள்ளுங்கள். வீட்டில் பிள்ளைகளுக்கு புது துணி அளவெடுக்க வரச் சொன்னார்கள் என்று தகவல் சொல்லி விட்டுச் சென்றார் கார்ச் சாரதி.

உதவியாளரிடம் கடையைப் பார்த்துக்கொள் என்று சொல்லிவிட்டு சாரதி கொடுத்த 500 ரூபாயை எடுத்துக்கொண்டு உணவகத்துக்குக் கிளம்பினார் தையல்காரர்.

கல்லாவில் அமர்ந்திருந்த உணவக உரிமையாளரிடம் ஐயா என் மகளின் சடங்குக்கு தங்கள் கடையில் சாப்பாடு வாங்கிய வகையில் 500 ரூபாய் கடன் இருக்கிறது. இந்த 500 ரூபாயை வாங்கிக்கொண்டு கணக்கை நேர் செய்து கொள்ளுங்கள் என்று சாரதி கொடுத்த 500 ரூபாயை உணவக முதலாளியிடம் தருகிறார் தையல்காரர்.

சரி அப்படியே செய்து கொள்ளலாம் என்றபடியே ஐநூறு ரூபாயை வாங்கி வைத்துக் கொண்ட முதலாளி அதை இழுப்பறையில் தனியே ஒரு டப்பாவில் போட்டு வைக்கிறார்.

ஏனென்றால் மருமகன் வந்து கேட்டால் 500 ரூபாய் பணம் தரவேண்டுமே என்ற எண்ணத்தில் இந்த 500 முழு ரூபாய்த் தாளைப் பத்திரப்படுத்தி வைக்கிறார்.

சிறிது நேரத்தில் அவரின் மருமகன் வந்து மாமா நான் கொடுத்த 500 ரூபாய் கொடுங்கள் என்று கேட்டு வாங்கிக் கொள்கிறார்.

தான் கொடுத்த 500 ரூபாய் போலி நாணயத்தாள் தான் அது என்பதை உறுதி செய்துகொண்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்தார் முதலாளியின் மாப்பிள்ளை.

வெளியே வந்த மருமகன் எடுத்த 500 ரூபாயை சுக்கல் சுக்கலாகக் கிழித்துக் காற்றில் பறக்க விட்டார்.

இந்த 500 ரூபாய் ஒரு சுற்று சுற்றி வந்ததில் நடந்தது என்ன என்று கொஞ்சம் பார்ப்போம்.

முதலாளி பால்காரனுக்கு கொடுக்க வேண்டிய 500 ரூபாய் கடன் கணக்கு நேராகிவிட்டது. அதுபோலவே பால்காரன் வைத்தியருக்கு கொடுக்க வேண்டிய கடன் நேர் ஆகிவிட்டது. அப்படியே வைத்தியர் தையல்கடைக்காரருக்குக் கொடுக்க வேண்டிய கடன் நேராகிவிட்டது.

அதுபோலவே தையல்காரர் ஹோட்டலுக்கு கொடுக்க வேண்டிய கடனும் நேராகிவிட்டது.

இப்பொழுது போலி நாணயத்தாள் சுக்கல் சுக்கலாகி காற்றில் பறந்து விட்டது.ஆனால் இத்தனை பேர் கடனும் நேராகி இருப்பது நிஜமே. இதில் நஷ்டம் அடைந்தவர் யாரும் இருக்கிறாரா? அல்லது மாயாஜாலம் ஏதும் நடந்துள்ளதா? ஆகையால் நண்பர்களே பணம் என்பது வெறும் காகிதம் மட்டுமே: நட்பு உறவுகளுக்கு மதிப்பளிப்போம்....!!

---

# 'செவன் கப்' ஸ்வீட்



**தேவையான பொருள்கள்**

கடலை மாவு – 1 கப்,
தேங்காய்த் துருவல் – 1 கப்,
பால் – 1 கப், நெய் – 1 கப்,
சீனி – 3 கப், ஏலப்பொடி

**செய்முறை**

கடலை மாவை கட்டிகளில்லாமல் சலித்துக் கொள்ளவும்.

தேங்காயை அதன் தோல் சேர்ந்துவிடாமல் வெள்ளைப் பகுதியாக மட்டும் துருவி, ஒரு தேக்கரண்டி பால் விட்டு மிக்ஸியில் நைசாக அரைத்துக் கொள்ளவும்.

ஒரு பெரிய பாத்திரத்தில், காய்ச்சி ஆறிய பாலில் கடலை மாவை கட்டிகளில்லாமல் கலந்து கொள்ளவும்.

அத்துடன் நெய், சீனி, அரைத்த தேங்காய் விழுது சேர்த்து அடுப்பில் வைத்து நிதானமான சூட்டில் கிளற ஆரம்பிக்கவும்.

கைவிடாமல் கிளறி பாத்திரத்தில் ஒட்டாமல், நுரைத்துக் கொண்டு வரும்போது ஏலப்பொடி தூவி, இறக்கவும்.

இந்தப் பதத்தில் கேக் மாதிரி மென்மையாக வரும். இன்னும் சிறிது நேரம் இழுத்துக் கிளறியும் இறக்கலாம். இந்தப் பதத்தில் பர்பி மாதிரி இறுக்கமாக வரும். ஆனால் தேங்காய் சேர்த்திருப்பதால் மைசூர்பாகு மாதிரி பாறையாகிவிடும் பயம் இதில் இல்லை.

இதுவும் சாப்பிட மென்மையாகவே இருக்கும். சொல்லவருவது, தெரியாமல் பதம் தாண்டி இறக்கிவிட்டாலும் தவறாகிவிடாது. சுவையாகவே இருக்கும்.

ஒரு நெய் தடவிய தட்டில் கொட்டி, சிறிது ஆறியதும் வேண்டிய வடிவில் வில்லைகள் போடலாம்.

## பிரதித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணைக்குழுவுக்கு பல்கலைக் கழகப் பேரவை நேற்றுப் பரிந்துரைத்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடம், தொழிநுட்ப பீடம் ஆகியவற்றின் முன்னாள் பீடாதிபதியும் கணித புள்ளி விவரவியல் துறையின் மூத்த பேராசிரியருமான சி.சிறீசற்குணராசா மற்றும் விவசாய பீடத்தின் முன்னாள் பீடாதிபதியும் உயர் பட்டப்படிப்புகள் பீடத்தின் பீடாதிபதியுமான கே.மிகுந்தன் ஆகிய இருவரின் பெயர்களையுமே பேரவை பரிந்துரைத்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிர்வாகத்தை ஸ்திரமான தாகவும் வினைத்திறனாகவும் முன்னெடுப்பதற்கும் 1976ஆம் ஆண்டு 36ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்துக்கு இணங்க பிரதித் துணைவேந்தர் ஒருவரை நியமிக்க தகுதி வாய்ந்த அதிகாரி பேராசிரியர் க.கந்தசாமி தீர்மானித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வரலாற்றில் ஒவ்வொரு துணைவேந்தர் தெரிவின்போதும் அதில் போட்டியிடுவோர் தாம் துணைவேந்தராகத் தெரிவானதும் பிரதித் துணைவேந்தர் ஒருவரை முன்மொழிந்து பல்கலைக் கழக நிர்வாகத்தை வினைத்திறனாக முன்னெடுப்போம் என்று பேரவை முன் உரையாற்றுவர்.

எனினும் எந்தவொரு துணைவேந்தரும் பதவிக்கு வந்த பின்னர் பிரதித் துணைவேந்தரை நியமிப்பதற்கான அனுமதியை பேரவையிடம் கோருவதில்லை.

இந்த நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வாழ்நாள் பேராசிரியர் க.கந்தசாமி, தகுதி வாய்ந்த அதிகாரியாக உயர் கல்வி அமைச்சால் நியமிக்கப்பட்ட தனக்கு வழங்கப்பட்ட பதவிக்காலத்தினுள் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நிலவும் ஸ்திரமற்ற தன்மைகளை சீர்செய்யும் வகையில் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்.

அந்த வகையில் நிர்வாகத்தை வினைத்திறனாக முன்னெடுக்கும் வகையில் பிரதித் துணைவேந்தர் ஒருவரை நியமிக்க வுள்ளார்.

பிரதித் துணைவேந்தர் பதவிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் உள்ளக விண்ணப்பம் கோரப்பட்டது. அதற்கு பேராசிரியர் சி.சிறீசற்குணராசா, பேராசிரியர் கே.மிகுந்தன் ஆகிய இருவரும் மட்டுமே விண்ணப்பித்திருந்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக பேரவையின் அனுமதிக்காக அவர்கள் இருவரின் பெயர்களும் நேற்று சமர்ப்பிக்கப்பட்டன. அவர்கள் இருவரில் ஒருவரை நியமிப்பதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேரவை தனது பரிந்துரையை பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு வழங்கியது.

இதேவேளை, அடுத்த துணைவேந்தர் பதவிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ள நிலையில் பேராசிரியர் சி.சிறீசற்குணராசா, பேராசிரியர் கே.மிகுந்தன் ஆகிய இருவரும் அதற்கு விண்ணப்பம் செய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பெண்களே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றும் போது அவர் இதனை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் –

எனக்கு இன்றும் ஞாபகம் இருக்கிறது, கடந்த 2015 ஜனவரி 9 ஆம் திகதி இந்நாட்டின் பெண்களின் முகத்தில் இருந்த சோக மான உணர்வு. அன்று இந்நாட்டில் இடம்பெற்ற மாற்றத்திற்கு அதிகளவில் வருகைதந்தவர்கள் பெண்கள். அது மட்டுமில்லை, ஜனவரி 8 ஆம் திகதி முதல் சில மாதங்களுக்கு தங்காலையில் அமைந்துள்ள எனது வீட்டிற்குப் பெருந்திரளான மக்கள் வந்தனர். அங்கு வந்த மக்களில் அதிகளவில் இருந்தவர்கள் பெண்கள். அம்மாமார்கள், சகோதரிகள், பெண் பிள்ளைகள்.

நாம் தேர்தலில் தோல்வியடைந்த போதும், மக்கள் மனங்களில் இருந்து நீங்கவில்லை என எமக்கு எடுத்துரைத்தவர்கள் பெண்கள். எம்மை தனிமைப்படுத்த யாராலும் முடியாது, நாம் தனிமைப்படுத்தப்படவில்லை என்ற உணர்வை எமக்கு கொடுத்தவர்கள் இந்நாட்டு பெண்கள். இந்நாட்டு பெண்களின் நெஞ்சில் எரிந்த தீயை எமது அரசாங்கம் அணைத்தது. எனினும், கடந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் எமது பெண்கள் மீண்டும் அச்சத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

பயப்பட வேண்டாம், நாங்கள் இருக்கின்றோம். – எனத் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள கோட்டாபய ராஜபக்ஷவும் உரையாற்றினார்.

## யாழ். மாவட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுத்துமாறு காணி உரிமையாளர்களை வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பாக ஆளுநர் அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

யாழ்மாவட்டத்தில படைத்தரப்பு மற்றும் பொலிஸாரால் பயன்படுத்தப்படும் தனியார் காணிகளை அடையாளம் கண்டு அவற்றைத் துரிதகதியில் மீளக் கையளிப்பதற்கான நடவடிக்கைகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் துரிதப்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் வட மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டத்தின் அடிப்படையில் யாழ் மாவட்டத்தில் முப்படையினர் மற்றும் பொலிஸார் நிலை கொண்டுள்ள தனியார் காணிகள் தொடர்பான விவரங்களை காணிகளின் உரித்தாளர்கள் அறியத் தருவதன் மூலம் அக்காணிகள் அடையாளப்படுத்தப்பட்டு உரிமை கோருபவர்களிடம் மீளக்கையளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதன் அடிப்படையில் இதற்காகத் தயாரிக்கப்பட்ட விசேட விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து உரிமைகோரலுக்கான தகுந்த ஆதாரத்துடன் அல்லது தகுந்த விளக்கத்துடன் மீளப்பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு காணி உரிமையாளர்களை கேட்டுக்கொள்கின்றோம்.

குறித்த விண்ணப்பப் படிவத்தை ஆளுநர் செயலகம், யாழ் மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் மற்றும் வடமாகாண சபையின் https://np.gov.lk/ என்ற இணையத்தளத்திலும் பெற்றுக்கொள்ள முடியும்.

காணி உறுதியின் பிரதியுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை இணைத்து எதிர்வரும் செப்டம்பர் மாதம் 09 ஆம் திகதிக்கு முன்னர், 'காணி கோரல்', வடமாகாண ஆளுநர் செயலகம், பழைய பூங்கா, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். – என்று உள்ளது.

## ஹாய்ய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து கருத்துத் தெரிவிப்பது நகைச்சுவையாகவுள்ளதாக பொதுஜனப் பெரமுன ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவின் ஊடகப் பேச்சாளர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

பொருத்தமான அரசமைப்பொன்றை இப்போதாவது கொண்டுவர வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் தெரிவித்திருந்த கருத்துக்குப் பதிலளிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஜனாதிபதி நகைச்சுவை கதாபாத்திரத்தை ஏற்கக் கூடாது. புதிய அரசாங்கமொன்று அமைக்கப்படும்போதுதான் புதிய அரசமைப்புக் குறித்துப் பேசப்படுவது அரசியல் வழமையாகும். இதுவரையில் எமது நாட்டின் வரலாற்றில் அரசாங்கத்தின் இறுதிக் காலத்தில் அரசமைப்பு மாற்றம் குறித்து பேசப்பட்டது இல்லை. – எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# கைதான மருத்துவர் சிவரூபன் இப்போது மட்டக்களப்பிற்கு!




பளையில் கைது செய்யப்பட்ட வைத்தியர் சிவரூபனை பயங்கரவாத விசாரணை பிரிவு அதிகாரிகள் மட்டக்களப்பிற்கு கொண்டு சென்றுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

யாழ்ப்பாணத்தில் பயங்கரவாத விசாரணை பிரிவில் விசாரணை செய்யப்பட்டு வந்த வைத்தியர் சிவரூபன், கூறிய தகவல்களின் அடிப்படையில் ஆயுதங்கள் பல மீட்கப்பட்டன எனக் கூறப்பட்டது. வேறு சிலர் கைது செய்யப்பட்டனர்.

தற்போது அவரை மட்டக்களப்பிற்கு கொண்டு சென்றுள்ளமையால், அங்கும் கைதுகள் இடம்பெறலாம் என்று நம்பப்படுகிறது.

## முதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலில் முதலாவது வாக்கைத் தங்களுக்கும் இரண்டாவது வாக்கை ஐக்கிய தேசியக் கட்சிக்கும் போடுமாறு ஜே.வி.பி. அறிவித்துள்ளது என்றும் அவர் தகவல் வெளியிட்டார்.

யாழ்.ஊடகமையத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:–

இலங்கையில் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் இனவாதம், மதவாதம், பாசிச வாதம் போன்றவற்றைக் கொண்டு தேர்தலில் வெற்றி பெற ஒவ்வொரு கட்சியும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இதனால் நாடு மிக மோசமான நெருக்கடிக்குள் செல்லப் போகின்றது.

தற்போதைய சூழ்நிலையில் இரண்டு முக்கிய கட்சிகள் தமது ஜனாதிபதி வேட்பாளர் யார் என்று அறிவித்துள்ளன.

பொதுஜன பெரமுன கட்சியின் சார்பாக முன்னாள் பாதுகாப்பு செயலரும், மஹிந்தவின் சகோதரருமான கோட்டாபய ராஜபக்ஷ வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். இவர் முன்னர் பதவியில் இருந்த போது பல குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியவர். மிக முக்கியமாக சர்வதேச ரீதியில் போர்க் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருக்கின்றார். கடந்த கால ஆட்சியில் மஹிந்தவும், கோட்டாபயவும் மேற்கொண்ட செயற்பாடுகளினால் பொதுமக்கள் பட்ட துன்பங்கள் ஏராளம். அதனை மக்கள் அனுபவ ரீதியாக உணர்ந்துள்ளனர். அவற்றை மக்கள் மறக்க மாட்டார்கள்.

மறுபக்கம் ஐக்கிய தேசியக் கட்சி தங்களின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என அறிவிப்பதில் இழுபறியில் நிற்கின்றது. ரணில் விக்கிரமசிங்க இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் செயற்பட்டு வருகின்றார். அண்மையில் அதே கட்சியை சேர்ந்த சஜித் பிரேமதாஸாவுடன் பேசிய போது அவரும் 13 ஆவது திருத்தச் சட்டமூலத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவேன் எனக் கூறினார்.

எனவே வடக்கு, கிழக்குத் தமிழ் மக்கள் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் சிந்தித்துச் செயற்பட வேண்டும். மக்கள் முன்னிலையில் தீர்வு தொடர்பில் வெளிப்படையாகச் செயற்படக் கூடிய தரப்பினரையே தெரிவு செய்ய வேண்டும். மக்கள் பலரும் அரசியல்வாதிகள் மீது அதிருப்தியில் உள்ளனர். அதற்காக வாக்களிக்காது விட்டால் கடந்த காலத் துன்பங்களை மீண்டும் அனுபவிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை உருவாகும்.

எனவே தென்னிலங்கை மக்களாக இருந்தாலும், வடக்கு, கிழக்கு மக்களாக இருந்தாலும், அனைவரும் இணைந்து ஜனநாயகவாதியைத் தேர்ந்தெடுக்க வேண்டும். நீண்ட காலத்தின் பின்னர் ஜே.வி.பியும் ஜனாதிபதித் தேர்தலில் களம் இறங்கியுள்ளது. அவர்கள் தங்கள் கட்சி சார்பாக அவர்களது தலைவர் அனுரகுமார திஸநாயக்கவை அறிவித்துள்ளனர். அது மட்டுமல்லாது தேர்தலில் முதலாவது வாக்கைத் தங்களுக்கும் இரண்டாவது வாக்கை ஐக்கிய தேசியக் கட்சிக்கும் போடுமாறு அறிவித்துள்ளது. அவ்வாறான நிலையில் இரண்டாவது விருப்பு வாக்கு எண்ணக்கூடிய சூழ்நிலை உருவாகினால் பாரிய – மிக மோசமான – கலவரம் உருவாகும்.

இதனைப் பயன்படுத்தி இனவாத, மதவாத, பாசிசவாத சக்திகள் பெருங் கலவரத்தை உருவாக்க முற்படுவார்கள். எனவே கடந்த காலக் கசப்பான அனுபவங்களை மனதில் வைத்து இனவாத, மதவாத சக்திகளை மக்கள் தோற்கடிக்க வேண்டும்.

ஜே.வி.பியும் கடந்த காலங்களில் புரிந்த அட்டகாசங்களை நான் சொல்லித்தான் தெரிய வேண்டும் என்றில்லை. அன்று தமிழ் மக்களுக்கான தீர்வை பெற்றுக் கொடுக்க முற்பட்டவர்கள் மீது ஜே.வி.பி. கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டது. தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை, சம அந்தஸ்து வேண்டி நான் செயற்பட்ட வேளை என் மீதும் துப்பாக்கிச் சூடு நடத்தினர். விஜய குமாரதுங்கவைப் படுகொலை செய்தனர்.

இவ்வாறான நிலையில் ஜே.வி.பியினால் தமிழ் மக்களுக்கு எவ்வாறு விடுதலையை பெற்றுக் கொடுக்க முடியுமென்ற கேள்வி பலமாக எழுகின்றது. தற்போது ஜே.வி.பியினர் தமது அரசியல் செயற்பாட்டில் மாறுபாட்டைக் காட்டினாலும் அதை வைத்து மக்கள் அவர்களுக்கு வாக்களிப்பதால் எந்த பிரயோசனமும் ஏற்படப் போவது இல்லை. இதனை மக்கள் நினைவில் வைத்திருக்க வேண்டும். – என்றார்.

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியமனம் வழங்கும் நிகழ்வு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தலைமையில் யாழ் பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது .

இந்த நிகழ்வில் ஆளுநர் தெரிவிக்கையில் –

ஆரம்பகால கல்வி என்பது மிகவும் முக்கியமானது. விழுந்திருக்கின்ற இந்த தேசத்தின், விளிம்பிலே இருக்கின்ற மக்களை திரும்பவும் வாழவைப்பதற்காக, வருகின்ற சந்ததியின் ஆரம்பக் கல்வியை உங்கள் கைகளில் இந்த மாகாணம் இன்று கொடுக்கின்றது.

எனவே இந்தப் பொறுப்பை இறைபக்தியுடனும் சமுதாய நோக்கத்துடனும் செய்து இந்தத் தேசத்தைத் திரும்பவும் கட்டியெழுப்பும் பணியை செவ்வனே செய்ய வேண்டும் என்பதுதான் எனது வேண்டுகோள். – என்றார்.

இந்த நிகழ்வில் 148 ஆரம்பக் கல்வி ஆங்கில ஆசிரியர்களுக்கான நியமனமும் 67 உடற்கல்வி டிப்ளோமாதாரர் ஆசிரியர்களுக்கான நியமனமும் வழங்கப்பட்டன.

## மட்டக்களப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் காரைதீவுக் கடற்கரை தீர்த்தக்கரையாக மாறியது. பார்க்குமிடமெல்லாம் சனக் கூட்டம்.

பல மீனவர்களுக்கு மாறி மாறி மீன்கள் அள்ளுப்பட்டு அகப்பட்டன. பி.நமசிவாயம் என்ற மீனவருக்கு சுமார் 10ஆயிரம் கிலோ பாரைக்குட்டி மீன்கள் பிடிபட்டன.

அண்மைக்காலமாக 1கிலோ மீன் 350 ரூபாவிற்கு விற்கப்பட்டது. ஆனால் நேற்று கடலோரத்தில் இலவசம். ஊருக்குள் மீன் விற்பவர்கள் ஒரு கிலோ 150 ரூபாவுக்கு விற்றனர்.

வலையிலிருந்து தவறிய மீன்களை எடுத்து பல்லாயிரம் ரூபாவுக்கு விற்ற பொதுமகனும் இருக்கிறார்.

கடற்கரையோரமெல்லாம் மீன்மயம். சிறுவர்களும் கையால் மீன்களைத் துடிக்கத்துடிக்க மகிழ்ச்சியுடன் பிடித்துச் சென்றனர்.

நீண்ட நாள்களுக்குப் பிறகு மீனவர்கள் மத்தியில் பெரு மகிழ்ச்சி நிலவுகிறது.

## கடவுளின் அருகாமை தரும் மாற்றம்

கடவுளின் அருகாமை என்பது நமக்குள் மாற்றம் தருகிறது. கடவுளின் அருகாமை என்பது நம்மை புதிய மனிதர்களாக உருமாற்றுகின்றது. கடவுளுக்கு அருகாமையில் நடப்பவர்கள் தடு மாறி வீழ்வதில்லை, அவர்கள் புதிதாகத் தொடங்கி மீண்டும் முயற்சி செய்து மீண்டும் கட்டியெ ழுப்பி மேலும் முன்னோக்கி நடக்கின்றனர் என்ற கருத்தைதன் டுவிட்டர் செய்தியில் தெரிவித் துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

காலைக்கதிர் Kalaikathir

கிறிஸ்தவ செய்தி இதழ் TCNL

உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37

ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

## வானுலகில் எல்லையற்ற எண்ணிக்கையில் இடங்கள் உள்ளன

வானுலகில் எல்லையற்ற எண்ணிக்கையில் இடங்கள் உள்ளன. ஆனால் அவ்விடத்திற்கு நாம் செல்வதற்கு நாம் குறுகியப் பாதை வழியாகச் செல்ல வேண்டியிருக்கும். அதாவது இறைவ னையும் நமக்கு அடுத்திருப்பவரையும் அன்பு கூர்வதன் வழியாகத்தான் அவ்விடத்திற்கு நாம் செல்லமுடியும். வானுலகில் உள்ள இந்த எல்லையற்ற இடங்களுக்கு செல்வது அவ்வளவு எளிதானதல்ல என்று டுவிட்டர் செய்தியில் தெரிவித்துள்ளார் திருத்தந்தை.

### குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக

# உரிய விசாரணைகளை நடத்த அரசு தவறியுள்ளது

### கத்தோலிக்க ஆயர் பேரவை வலியுறுத்து

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துக்கு அரசோ அரசியல்வாதிகளோ நீதியான விசார ணைகளை மேற்கொள்ளாது இருப்பதையிட்டு இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை தனது கவலையை வெளியிட்டுள்ளது.

நாம் இந்த அரசாங்கத்திடமும் அரசியல் தலைவர்களிடமும் வலியுறுத்தி கேட்டுக் கொள் வது நீதி நேர்மையுடன் பக்கச் சார்பற்ற முறையில் விசாரணைகளை மேற்கொள்வது கட்டாயத் தேவையாக இருக்கின்றதென இலங்கை கத்தோ லிக்க ஆயர் பேரவை வலியுறுத்தி நிற்கிறது.

கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலுக்குப் பின்னர் நாட்டின் சுழல் குறித்து அறிக்கை ஒன்றை இலங்கை கத் தோலிக்க ஆயர் பேரவை வெளியிட்டுள்ளது. இந்த தாக்குதலுக்கு காரணமான குற்றவாளிகளை இனங்கண்டு நீதியின் முன் கொண்டு வருமாறு நாம் அரசை கேட்டிருந்தோம். ஆனால் இவ்விட யத்தில் இதுவரையும் நீதியான விசாரணைகள் எதுவும் நடத்தப்படவில்லை.

குறித்த சம்பவத்தினால் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை தனது ஆழ்ந்த கவலையை தெரி வித்து நிற்கின்றது. பாதுகாப்புக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்கள் யார் என்பதையும் நாம் கேட்டு நிற்கின்றோம்.

நாம் இந்த அரசாங்கத்திடமும் அரசியல் தலை வர்களிடமும் வலியுறுத்தி கேட்டுக்கொள்வதாவது நீதி நேர்மை ஆகியவற்றுக்கமைய பக்கச் சார் பற்ற முறையில் விசாரணைகளை மேற்கொள்வது கட்டாயத் தேவையாக இருக்கின்றது.

## புனித திருமுழுக்கு யோவானே எங்களுக்காக மன்றாடும்

ஓகஸ்ட் 29, அன்று, புனித திருமுழுக்கு யோவான் மறைசாட்சிய மரணமடைந்த நினைவு நாள் கடைபிடிக்கப்பட்ட தையொட்டி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் டுவிட்டர் செய்தியை, அப் புனிதருக்கு விடுக்கப்படும் ஒருசெபமாக வெளியிட்டார். உண்மைக்காக உயிர் துறந்ததன் வழியே மெசி யாவுக்கு ஒரு சாட்சியாகத் திகழ்ந்த புனித திருமுழுக்கு யோவானே எங்களுக்காக மன்றாடும் என்ற சொற் களை, திருத்தந்தை தன் டுவிட்டர் செய்தியாகப் பதிவு செய்திருந்தார். ஒவ்வொரு நாளும் திருத்தந்தை வழங்கி வரும் டுவிட்டர் செய்திகள், இத்தாலியம், ஆங்கிலம், பிரெஞ்சு, இஸ்பானி யம், போர்த்து கீசியம், ஜேர்மன், போலந்து, இலத்தீன் மற்றும் அரேபியம் ஆகிய ஒன்பது மொழிகளில் வெளியாகின்றன.



29 ஓகஸ்ட் 2019 முடிய திருத்தந்தை பிரான்சிஸ் வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்திகள் 2,094 என்பதும் அவரது டுவிட்டர் பதிவுகளை, ஆங்கில மொழி யில் பின்பற்றுவோரின் எண்ணிக்கை மட்டும் 1 கோடியே 81 இலட்சம் என் பதும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் திருத்தந்தை பிரான்சிஸின் செயல் பாடுகளை மையப்படுத்தி வெளியிடப்படும் புகைப் படங்கள் மற்றும் காணொ லிகள் அடங்கிய தளத்தில் இதுவரை வெளியான புகைப்படங்கள் மற்றும் காணொலிகள் 751 என் பதும் அவற்றைப் பின்பற்று வோரின் எண்ணிக்கை 62 லட்சம் என்பதும் குறிப்பி டத்தக்கது.

### சுகநல சேவையில்

## 90 ஆவது அகவையில் காலடி வைக்கும் இலங்கை திருச்சிலுவைக் கன்னியர்




14 செப்ரெம்பர் 2019 அன்று இலங்கை திருச்சிலுவைக் கன்னி யர் சபையினர் திருச்சிலுவையின் மகிமை விழாவை தமது சபையின் பெருவிழாவாகக் கொண்டாடும் வேளை இலங்கையில் திருச்சிலு வைக் கன்னியர் சபையினர் சுக நல சேவை பணியில் 90 ஆண்டு களை (1930 - 2019) நிறைவை செய்வதையும் திருச் சிலுவைக் கன்னியர் சபை சுவிற்சலாந்து நாட்டில் மென்சிங்கன் கிராமத்தில் 17 ஒக்ரோபர் 1844 ஸ்தாபிக்கப் பட்ட 175ஆவது ஆண்டு நிறை வையும் மகிழ்வோடு கொண்டாடு கின்றனர்.

கப்புச்சின் சபையைச் சேர்ந்த தியோடோசியஸ் அடிகளாரால் அருட்சகோதரிகள் பேர்னாடா ஹெய்ம்காட்னர், பெலிசியானா கிராமர், கொர்னேலியா ஆகியோ ருடன் சுவிற்சர்லாந்து நாட்டில் மென்சிங்கன் கிராமத்தில் 17 ஒக்ரோபர் 1844ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட திருச்சிலுவைக் கன்னியர் சபையானது இன்று 175ஆவது ஆண்டு நிறைவில் உலகின் நான்கு கண்டங்களில் உள்ள 18 நாடுகளில் பரந்து பணி யாற்றுகிறது.

மூன்று சுவிஸ் அருட் சகோதரி களுடன் 1930ஆம் ஆண்டு இலங்கை ஊர்காவற்றுறையில் சுகநல சேவை பணியை ஆரம் பித்த திருச்சிலுவைக் கன்னியர் சபை 90 ஆண்டுகளின் நிறை வில் இன்று இலங்கையின் ஒன் பது மறைமாவட்டங்களிலும் பாகிஸ்தானில் ஓர் மறைமாவட்டத் திலும் தன் கிளைகளைப் பரப்பி சேவையை ஆற்றும் ஒரு விருட் சமாகவும் திகழ்கின்றது.

## புனித அன்னை தெரேசாவின் 109 ஆவது பிறந்தநாள்

புனித அன்னை தெரேசா அவர்களால் உருவாக்கப்பட்ட பிறரன்பு மறைபரப்புப் பணியாளர்கள் சபையைச் சேர்ந்த துற வியர் 26 ஓகஸ்ட் 2019 அன்று அன்னை தெரேசாவின் 109 ஆவது பிறந்தநாளை சிறப்பித்தனர். கொல்கத்தாவில் புனித அன்னை தெரேசா அடக்கம் செய்யப்பட் டுள்ள கல்லறைக்கருகே கொல்கத்தா பேராயர் தோமஸ் டி சுசா அவர்கள் நிறை வேற்றிய திருப்பலியுடன் பிறந்த நாள் கொண்டாட்டம் தொடங்கியது.

தன் பணிகள் வழியே இயேசுவை பிற ருக்கு வழங்குவதில் தணியாத ஆர்வம் கொண்டிருந்த அன்னை தெரேசா பணிவாழ்வில் நாமும் முழு ஆர்வத்துடன் ஈடுபட நமக்கு அழைப்பு விடுக்கிறார் என பேராயர் டி சுசா அவர்கள் தன் மறையுரை யில் கூறினார்.

நமது பணிகளில் பிரமாணிக்கமாக இருப்பதே முக்கியம் பணிகளில் வெற்றிய டைவது அல்ல என்று அன்னை தெரேசா அவர்கள் அடிக்கடி கூறிய சொற்களை பிறரன்பு மறை பரப்புப் பணியாளர்கள் சபையின் உலகத் தலைவர், அருள் சகோதரி மேரி பிரேமா அவர்கள் நினைவு கூர்ந்தார்.

அன்னை தெரேசா அவர்களால் உரு வாக்கப்பட்ட பிறரன்பு மறைபரப்புப் பணி யாளர்கள் சபையில் பணியாற்றும் 4 ஆயிரத்து 500 இற்கும் அதிகமான அருள் சகோதரிகள் 136 நாடுகளில் 700க்கும் அதிகமான இல்லங் களில் அன்னையின் பிறந்தநாளைக் கொண்டாடினர்.

1910 ஆம் ஆண்டு வட மாசிடோனியா வின் தலைநகரில் பிறந்த அன்னை தெரேசா 1997ஆம் ஆண்டு செப்டம்பர் 5ஆம் திகதி இறையடி சேர்ந்தார். இவர் மரணமடைந்த ஆறாம் ஆண்டிலேயே திருத்தந்தை புனித 2 ஆம் யோண் போல் அவர்கள் 2003ஆம் ஆண்டு ஒக்ரோபர் 19 ஆம் திகதி இவரை அருளாளராக உயர்த்தினார்.

இரக்கத்தின் சிறப்பு யுபிலி 2016 ஆம் ஆண்டு திருஅவையில் சிறப்பிக்கப்பட்ட வேளையில் செப்டம்பர் 4ஆம் திகதி திருத்தந்தை பிரான்சிஸ் அருளாளர் அன்னை தெரேசாவை புனிதராக உயர்த் தினார். புனித அன்னை தெரேசா அவர் களின் திருநாள் கொண்டாடப்படும் செப்ரெம்பர் 5ஆம் திகதியை அனைத்து லக பிறரன்பு நாள் என்று ஐ.நா. அவை 2012ஆம் ஆண்டு அறிவித்தது.



# இளமை இதோ, இதோ...!



## 70 வயதிலும் கர்ப்பம் தரிக்கும் 'குமரிப்பெண்கள்'!!

உலகத்திலேயே உங்களுடைய பரம்பரை தான் அழகும் இளமையும் அதிக ஆண்டுகள் உயிர் வாழும் வரமும் பெற்றிருக்கிறார்கள் என்றால் உங்களுக்கு எவ்வளவு பெருமிதம் பொங்கும்?

ஆனால் அப்படி அத்தனை வரங்களையும் மொத்தமாகப் பெற்று, ஆனால் அதில் எந்த பெருமிதமும் இல்லாமல் அமைதியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்றால் நம்ப முடிகிறதா?

ஆம். அத்தனை வரங்களையும் மொத்தமாக வாங்கி வந்தது குன்ஸா இனம் தான். இவர்கள் இஸ்லாமிய மதத்தைக் கடைபிடிக்கிறார்கள். குன்சா என்பது அங்குள்ள இஸ்லாமியர்களில் ஒரு குறிப்பிட்ட சாதியினரைக் குறிக்கிறது. இந்த இனத்து மக்களை கோட்டீஸ் என்றும் அழைக்கிறார்கள்.

வடக்கு பாகிஸ்தானில் உள்ள கரகோரம் என்னும் மலைப்பிரதேசத்தில் தான் இந்த சாதியினர் வாழ்கின்றனர்.

குறிப்பாக, இவர்கள் அதிகம் வாழும் பகுதியென்றால் புருஸீ குன்ஞ்சவாலி என்னும் பள்ளத்தாக்குப் பகுதியில் தான்.

உலகிலேயே அதிக ஆண்டுகள் உயிர் வாழ்வதும் அதிக ஆரோக்கியமாக இருப்பதும் இவர்கள்தான்.

இந்த இனத்தில் ஒருவருக்குக்கூட இது வரையிலும் புற்றுநோய் வந்ததே கிடையாதாம்.

70 வயதிலும் பெண்கள் இங்கு சாதாரணமாக கர்ப்பம் தரிக்கிறார்கள். குழந்தை பெற்றுக் கொள்கிறார்கள். 90 வயது வரையிலும் மாத விலக்கு நிற்பதே இல்லை.

இம்மக்கள் புருஸாஷ்கி என்னும் ஒரு வட்டார மொழியைப் பேசுகிறார்கள்.

இவர்கள் தங்களை அலெக்சாண்டரின் பரம்பரையில் இருந்து வந்தவர்கள் என்று நம்புகிறார்கள்.

நான்காம் நூற்றாண்டில் தான் இவர்கள் இந்த மலைப் பகுதிகளில் குடியேறியிருக்கிறார்கள்.

இந்த இனத்தின் ஒட்டு மொத்த மக்கள் தொகை வெறும் 87 ஆயிரம் மட்டுமே. கல்வியிலும் இவர்கள் சிறந்து விளங்குகிறார்கள்.

### வாழ்க்கை முறை

இவர்கள் சைவ உணவுகளை மட்டுமே சாப்பிடுகிறார்கள். அசைவ உணவில் முட்டையை மட்டுமே சாப்பிடுகிறார்கள்.

## 120 வயது ஆயுளுடன் வாழும் அதிசயம்

காய்கறிகள், பழங்கள், தானியங்கள், பால், முட்டை, வால்நட் போன்ற உலர் பழங்கள் ஆகியவற்றை சமைக்காமல் அப்படியே பச்சையாகச் சாப்பிடுகிறார்கள்.

வால்நட் இவர்களின் பிரதான உணவாக இருக்கிறது. வால்நட்டில் விற்றமின் பி 17 அதிகமாக இருக்கிறது. அது புற்றுநோய் வராமல் பாதுகாக்கும்.

இவர்கள் வாழும் மலைப்பகுதிகளில் பெரும்பான்மையான நாள்கள் 0 டிகிரிக்கும் குறைவான வெப்பநிலை தான் இருக்கிறது. ஆனாலும் இவர்கள் குளிர்ந்த நீரில் தான் குளிப்பார்களாம்.

இவர்கள் மிகமிக குறைவாக சாப்பிட்டு, அதிக தூரம் நடைபயிற்சி செய்கிறார்கள். ஒரு நாளைக்கு 15 முதல் 20 கிலோ மீற்றர் வரையிலும் மிகச் சாதாரணமாக நடைபயிற்சி செய்கிறார்கள்.

வருடத்தில் குறைந்தது 2 - 3 மாதங்களுக்கு எந்த உணவும் இவர்கள் எடுத்துக்கொள்வதில்லை. பழச்சாறு மட்டுமே அருந்துகிறார்கள்.

இந்த இனத்தவர்களின் சராசரி ஆயுள்காலம் 120. 70 வயது வரையிலும் மிக இளமையாகத் தெரிகிறார்கள்.

இப்படி ஓர் இனம் இருந்ததே தெரியாமல் இருந்தபோது, 1984 ஆம் ஆண்டு இந்த இனத்தைச் சேர்ந்த அப்துல் என்பவர் லண்டன் செல்வதற்காக விமான நிலையத்துக்குச் சென்றிருக்கிறார். அங்கு அவருடைய பாஸ்போர்ட் சரிபார்க்கப்பட்டிருக்கிறது. அவர் பார்ப்பதற்கு மிக இளமையாகத் தெரிந்திருக்கிறார். ஆனால் விமான நிலையத்தில் பணியாற்றியவர்கள் அவருடைய பாஸ்போர்ட்டை பார்த்து, நெஞ்சில் கை வைத்து அதிர்ந்து போனார்களாம். ஏனென்றால் பார்ப்பதற்கு இளமையாகத் தெரிந்த அவர் பிறந்த ஆண்டு 1832.

இந்தச் சம்பவம் நடந்தது 1984.

அந்த இளைஞரின் வயது அப்போது 152.

வாயைப் பிளக்காதீர்கள். இது உண்மை. ★



# வாடகைத் தாய்...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பிறந்து ஒரு மாதம் கழிந்த நிலையில் தனது குழந்தை யாரோ கையில் வளர்கிறதா? அதைக் காணக் கூட ஒரு சந்தர்ப்பம் கிட்டவில்லை. இப்பொழுது தாயுள்ளம் துடிக்காமலா விடும்?

மூன்றாவது குழந்தையை பராமரிக்க எந்த ஏற்பாடும் இவர்களிடம் இல்லை. அவள் குழந்தையை சும்மா ஒப்படைக்கவா போகிறாள்? சொந்த குழந்தையை விலை கொடுத்து வாங்குவதா? ஏற்கனவே வீடு வாங்கியதில் ஒப்பந்தத் தொகை காலியாகி விட்டது.

இப்படியான மனப் போராட்டங்கள் ஒரு புறம் புதிய சிக்கலாக உருவெடுக்க மறுபுறம் அவர்கள் குழந்தையின் DNA பரிசோதனைக்கு அழைப்பு விடுத்துள்ளார். DNA பரிசோதனை முடிவுகள் இந்த இரண்டாவது குழந்தை ஜெசிக்கா ஜெஸ்பர் தம்பதிகளினது தான் என்பது உறுதியாகிறது.

பரிதாபம் என்ன என்றால் சல்லிக்காசும் மீதம் இல்லாத இவர்களிடம் 22000 டொலர் நஷ்ட ஈடு கேட்டு நோட்டீஸ் அனுப்பியது அந்தச் சீனக் குடும்பம். அதற்கு மேலாக இவர்களின் குழந்தை என்று பதிவை மேற்கொள்ள 3000 டொலர்கள் பராமரிக்கும் வகையில் 10000 டொலர்கள் என சொந்தப் பிள்ளையைப் பெற 35000 டொலர்களை தவறேதும் செய்யாத இவர்கள் செலுத்த வேண்டுமாம்.

தவறு எவ்வாறு இடம் பெற்றுள்ளது என்று மருத்துவமனை தெளிவாக எதையும் கூற முடியாமல் திணறிக் கொண்டிருக்கும் வேளை அது.

சீனத் தம்பதிகளின் கருவை ஏற்றுக் கொண்ட பின்னர் எப்படி அத்திபாரத்துக்கு மேலாக அத்திபாரம் இடப்பட்டது போல ஜெசிக்காவினால் மீண்டும் கருத்தரிக்க முடிந்தது என்பதே பதில் இல்லாத கேள்வி.

மருத்துவ உலகினில் இதற்கு சரியான பதில் இல்லை. ஆயிரத்தில் ஒன்று லட்சத்தில் ஒன்று இப்படி அமைந்துவிடலாம் என்று சமாதானம் சொல்லிப் பார்த்தார்கள் அவர்கள். சொந்தக் குழந்தையை இவ்வளவு விலை கொடுத்து வாங்க வேண்டுமா கைவிடுவதா? கைவிட எந்த தாய் மனம் இடம் கொடுக்கும்.

IVF மருத்துவகுழுவினரின் பொறுப்பு கூறல் மழுப்பல் ஆக அமைவது ஏற்க முடியாது. அவர்கள் அனுமதித்த எல்லைகள் எதனையும் ஜெசிக்கா ஜெஸ்பர் தம்பதிகள் மீறவில்லை. இதற்காக வாதாட சட்டத்தரணிகளை அவர்கள் பெரும் பொருட் செலவில் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டி இருந்தது.

DNA பரிசோதனை முடிவுகளின் படி குழந்தை இவர்களுடையது எனினும் சட்டபூர்வமான நடவடிக்கைகளின்படி அது சீனத் தம்பதிகளின் குழந்தையே. இடையில் குழந்தையை பராமரிக்கும் நிறுவனம் வேறு செலவு தொகை கேட்டு மிரட்டுகிறது. இன்றேல் சட்டப்படி குழந்தையை தத்து எடுக்க துடிப்பவர்களுக்கு விலை பேசி தமது கட்டணங்களை அறவிட அவர்கள் நினைக்கிறார்கள்.

இறுதியில் மூவாயிரம் டொலர்கள் செலவிலான சட்டப் போராட்டம் வெற்றி கண்டு குழந்தை இவர்களின் கையில் கிடைக்கும் வரை பட்ட பாடு இருக்கிறதே அதனை என்னவென்பது.

பணம் கருதி பிறருக்காக கருவைச் சுமக்கும் பெண்கள் சந்திக்கும் சிக்கல்களில் தனது பிரச்சினை தனித்துவமானது. விநோதமானது என்பது ஜெசிக்காவினது அனுபவம். இனி கோடி கொடுத்தாலும் அவள் இதற்குத் துணிய மாட்டாள். வழக்கில் வெற்றி கிடைத்ததும் அந்த முகவர் நிறுவனம் இவர்களை சந்திக்கக்கூட விரும்பவில்லை. இவர்கள் உள் நுழைந்ததும் வாகனத் தரிப்பிடத்தில் வைத்தே ஒரு தாதி குழந்தையை இவர்களிடம் கொடுக்கிறாள்.

பிறந்து சில மாதங்கள் கழிந்து பெரும் மன மற்றும் பண போராட்டங்களைக் கடந்து இன்று குழந்தையை காணக் கிடைத்ததில் மட்டற்ற மகிழ்ச்சியே! ★



## ஓரங்கட்டப்படுகிறாரா டோனி...? அடியோடு மறுகின்றது தேர்வுக்குழு



டோனி ஓரங்கட்டப்பட உள்ளார் என வெளியான தகவலுக்கு தேர்வு குழு மறுப்புத் தெரிவித்துள்ளது.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட 20 ஓவர் தொடரில் விளையாடும் இந்திய கிரிக்கெட் அணியில் மூத்த விக்கெட் காப்பாளர் டோனி இடம் பெறவில்லை. அவரை ஓரங்கட்டுவதற்கான முதற்கட்ட நடவடிக்கை இது என்று தகவல்கள் வெளியான நிலையில் அதை இந்திய அணியின் தேர்வு குழு மறுத்துள்ளது. இது குறித்து பெயர் வெளியிட விரும்பாத தேர்வுக் குழு உறுப்பினர் ஒருவர் கூறியதாவது: -

டோனியை நாங்கள் புறக்கணிக்கிறோம் என்ற கேள்விக்கே இடமில்லை. 2020ஆம் ஆண்டு 20 ஓவர் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி நடக்க உள்ள நிலையில் அடுத்த கட்ட விக்கெட் காப்பாளரை தயார்படுத்துவதற்கு எங்களுக்கு அவர் அவகாசம் வழங்கியுள்ளார். மக்களின் கருத்துக்கு முன்பாக அணியின் நலன் தான் முக்கியம் என்பதை உணர்ந்துள்ளார்.

மேலும் குறுகிய வடிவிலான போட்டிகளில் விக்கெட் காப்பாளர் ரிஷப் பண்ட் காயமடைந்தால் அவருக்கு மாற்று விக்கெட் காப்பாளர் உண்மையிலேயே நம்மிடம் இல்லை என்பதையும் பரிசீலித்து அணிக்கு திரும்புவதில் காலம் தாழ்த்துகிறார். இப்போதைக்கு அவரை புறக்கணிக்கும் பேச்சுக்கே இடமில்லை. அதுமட்டுமின்றி மேற்கிந்தியத்தீவுகள் தொடருக்கு முன்பாக அவர் 2 மாத காலம் ஓய்வு கேட்டார். அந்த ஓய்வு காலம் இன்னும் முடிவடையவில்லை என்பதையும் கவனிக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## ஆஷஸ் கிரிக்கெட்: அண்டர்சன் விலகல்

ஆஷஸ் கிரிக்கெட் போட்டியிலிருந்து அண்டர்சன் விலகி உள்ளார்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அண்டர்சன், ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆஷஸ் முதலாவது டெஸ்டின் போது காயமடைந்தார். வெறும் 4 ஓவர் மட்டுமே பந்து வீசிய அண்டர்சன் வலது பின்னங்காலில் ஏற்பட்ட காயத்தால் வெளியேறினார். அதைத் தொடர்ந்து அடுத்த இரு டெஸ்ட்டுகளில் அவர் விளையாடவில்லை.

இந்த நிலையில் காயம் முழுமையாக குணமடையாததால் ஆஷஸ் தொடரின் எஞ்சிய இரு டெஸ்ட்டுகளில் இருந்தும் 37 வயதான அண்டர்சன் விலகியுள்ளார். அவருக்கு பதிலாக சகல துறை வீரரான கிரேக் ஓவர்டான் சேர்க்கப்பட்டுள்ளார். ஆஸ்திரேலியா - இங்கிலாந்து இடையிலான 4ஆவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 4ஆம் திகதி மான்செஸ்டரில் தொடங்குகிறது.





5 விக்கெட்டுகளை இழந்து 264 ஓட்டங்கள்

# இந்திய அணி நிதான ஆட்டம்

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 5 விக்கெட்டுகளை இழந்து 264 ஓட்டங்கள் சேர்த்துள்ளது.

இந்தியா - மேற்கிந்தியத் தீவு அணிகள் இடையிலான 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி ஜமைக்காவில் உள்ள கிங்ஸ்டனில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது.

இந்திய அணியில் மாற்றம் ஏதும் செய்யப்படவில்லை. இதனால் அஸ்வின் மீண்டும் வெளியே உட்கார வைக்கப்பட்டார். மேற்கிந்தியத் தீவு அணியில் இரு மாற்றமாக மிக்யூல் கம்மின்ஸ் மற்றும் காயமடைந்த ஷாய் ஹோப் ஆகியோருக்கு பதிலாக அறிமுக வீரர்களாக விக்கெட் காப்பாளர் ஜமார் ஹாமில்டன், ரகீம் கார்ன்வால் ஆகியோர் இடம் பிடித்தனர்.

நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத் தீவு அணித்தலைவர் ஹோல்டர் முதலில் இந்தியாவை துடுப்பெடுத்தாடச் செய்ய பணித்தார். இதன்படி இந்தியாவின் தொடக்க ஆட்டக்காரர்களாக லோகேஷ் ராகுலும், மயங்க் அகர்வாலும் களம் புகுந்தனர். முதல் ஓவரிலேயே பந்து இரண்டு முறை எல்லைக்கோட்டுக்கு ஓடியது.

இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்கு 32 ஓட்டங்கள் எடுத்து பிரிந்தது. லோகேஷ் ராகுல் (13 ஓட்டங்கள்), ஹோல்டரின் பந்து வீச்சில் ஸ்லிப்பில் நின்ற கார்ன்வாலிடம் சிக்கினார். அடுத்து வந்த புஜாரா (6 ஓட்டங்கள், 25 பந்து) சொதப்பினார். புதுமுக சுழற்பந்து வீச்சாளர் கார்ன்வாலின் பந்து வீச்சில் 'பாயிண்ட்' திசையில் புரூக்ஸிடம் கேட்ச் ஆனார்.

இதன் பின்னர் மயங்க் அகர்வாலுடன் அணித் தலைவர் விராட் கோஹ்லி இணைந்தார். நிதானமாக ஆடிய இவர்கள் அணியை சரிவில் இருந்து ஓரளவு மீட்டனர். மயங்க் அகர்வால் தனது 3ஆவது அரைச் சதத்தை கடந்த நிலையில், 55 ஓட்டங்களில் வெளியேறினார். அடுத்து களமிறங்கிய ரஹானே24 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து சிறப்பாக ஆடிய விராட் கோஹ்லி தனது அரை சதத்தை பதிவு செய்தநிலையில் 76 ஓட்டங்களில் கேட்ச் ஆனார்.

அடுத்ததாக ஹனுமான் விஹாரி மற்றும் ரிஷப் பாண்ட் ஆகியோர் ஜோடி சேர்ந்தனர். இந்த ஜோடியின் நிதானமான ஆட்டத்தால் அணியின்



ஓட்ட விகிதம் கணிசமாக உயர்ந்தது. பின்னர் முதல் நாள் ஆட்டநேர முடிவில் இந்திய அணி 5 விக்கெட்டுகளை இழந்து 264 ஓட்டங்கள் சேர்த்தது. இந்திய அணியின் சார்பில் ஹனுமான் விஹாரி 42 ஓட்டங்களும், ரிஷப் பாண்ட் 27 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

மேற்கிந்தியத் தீவு அணியின் சார்பில் ஜேசன் ஹோல்டர் 3 விக்கெட்டுகளும், கேமர் ரோச் மற்றும் ரகீம் கார்ன்வால் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.





பாற்கடல் மு. சிவநேசன்

# வாடகைத் தாய்

குழந்தை இல்லாத வாழ்க்கையின் மன உளைச்சல் மற்றும் ஏக்கங்கள் ஒருபுறம். குழந்தை பெறத் தயங்கும் அல்லது தள்ளிப் போடும் குடும்பங்கள் மறுபுறம். குழந் தைகளை கைவிடுவோர் விற்போர் வாங்குவோர் என்று நவீன உலகத்தில் ரகங்கள் பலவிதம்.

குழந்தை ஒன்றை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று நினைத்து பெரும் பொருள் செலவில் மகப்பேற்று சிகிச்சை நிலையங்களுக்குப் படையெடுக்கும் அனைவருக்கும் எல்லா வாய்ப்புக்களும் சரிவர அமைதல் இல்லை.

கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதை இது. விஞ்ஞானம் எவ்வளவு தூரம் வளர்ந்து விட்டா லும் விடை காண முடியாத புதிர்களும் முளைக்கத்தான் செய்கிறன.

அந்த அழகிய இளம்சீனத் தம்பதிகளை குழந்தை இல்லை என்ற நிலைமை படுத்தியபாடு கொஞ்சம் நஞ்சமல்ல. அவளுக்கு குழந்தையைச் சுமக்கும் பாக்கியம் கிட்டாத நிலைமையில் இருந்த ஒரே தீர்வு சோதனைக் குழாயில் செயற்கை முறையில் IVF முறையிலான கருக்கட்டலும் வேறொரு பெண்ணின் வயிற்றில் கருவை வளர்த்து ஆளாக்குவதும் தான்.

ஏற்கனவே சனத்தொகை பெருக்கத்தால் அவதிப்படும் சீனாவில் கருவைச் சுமக்க ஒரு வாடகைத் தாயை அமர்த்துவதற்கு சட்டங்கள் இடம் தர முடியாது என்றால் என்ன செய்வது.

ஒரு குழந்தையை பெற்றுக் கொள்ள வசதியாக அவர்கள் அமெரிக்காவிற்கு குடிபெயர்ந்தார்கள். என்றால் ஒரு குழந்தைப் பாக்கியத்தின் பெறுமதி பற்றி உணர்ந்தவர்கள் அவர்கள்.

மருத்துவத்துறையின் அபார வளர்ச்சி அவர்களுக்குக் கைகொடுத்தது. ஜெசிக்கா அலென்



என்ற அமெரிக்க பெண் ஏற்கெனவே இரண்டு ஆண் குழந்தைகளுக்கு தாயானவள். ஒரு முகவர் நிறுவனத்தின் ஊடாக இவர்களை சந்திக்கிறாள். இது இடம் பெற்றது 2016 இன் ஆரம்பத்தில்.

சீனத் தம்பதிகளின் கருவை தனது வயிற்றில் சுமக்கத் தயாராகும் அவளது வாடகைத் தாயாகும் மருத்துவத் தகுதி உறுதி செய்யப்படுகிறது. ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுகிறது. அமெரிக்க சன்டிகோவில் உள்ள ஒமேகா கருத்தரிப்பு சிகிச்சை மையம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறது.

ஆரம்பம் சுமுகமே. ஆய்வுகூட சோதனைக் குழாயில் கருக்கட்டல் படிமுறைகள் வெற்றிகரமாக நிறைவேறி சீனத் தம்பதிகளின் கரு ஜெசிக்காவினது கருப்பையில் பதிக்கப்பட்டு அது ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

கரு வளர்ச்சி தொடங்கியதும் அவளுக்கான ஒப்பந்த தொகையான முப்பதினாயிரம் அமெரிக்க டொலர் கொடுப்பனவும் உறுதி செய்து கொள்ளப்பட்டுவிட்டது.

வைத்திய பரிசோதனைகள் எல்லாம் சரியாக இருக்கின்றமையை உறுதிசெய்து கொண்ட பின்னர் வைத்தியர்கள் ஜெசிக்காவை அவளது வீட்டிற்கு இயல்பு வாழ்க்கைக்கான ஒப்புதலுடன் அனுப்பி வைத்தனர்.

வயிற்றில் சீனத் தம்பதிகளின் ஆண் குழந்தை, வீட்டில் அவளது கறுப்பின கணவன் ஜெஸ்பர், இரண்டு ஆண் குழந்தைகள், மனதில் புதிய வீடு வாங்க வேண்டும் என்ற கனவு, அதற்கான நிதிக்காக இந்த வாடகைத்தாய் ஒப்பந்தம்.

குழந்தையை பெற்றுக் கொடுத்துவிட்டு பணத்தை பெற்றுக் கொண்டு புதிய வீட்டில் குடியேறி விட வேண்டியது தான்.

ஆறு வாரங்கள் கழிந்த நிலையில் மருத்துவப் பரிசோதனைக்கு வந்திருந்த ஜெசிக்கா மற்றும் வைத்திய முகவர்களுக்கு சற்று அதிர்ச்சியான தகவலை அந்த ஸ்கான் காட்டியது. அவளது வயிற்றில் இரண்டு குழந்தைகள் வளருகின்றன என்கின்ற தகவல் அது.

சீனத் தம்பதிகளின் ஒற்றைக் கரு இரண்டாக உடைந்து ஒத்த இயல்புடைய இரட்டைக் குழந்தைகளாக வளர்ச்சி கண்டிருக்கிறது என்ற விளக்கத்தை அந்த மருத்துவ முகவர்கள் தந்து இருக்கிறார்கள்.

கருத்தரித்த பெண் மீண்டும் கருத்தரிக்க வாய்ப்பே இல்லாத நிலையில் இந்த விளக்கம் தரப்பட்டுள்ளது. சீனத் தம்பதிகளுக்கோ இரட்டிப்பு மகிழ்ச்சி. ஒரு கல்லில் இரண்டு மாங்காய் என்றால் சொல்லவா வேண்டும்? ஜெசிக்காவுக்கான கொடுப்பனவும் மாதாந்தம் அதிகரிக்கப்பட்டது. அமுதும் பிள்ளை அவள்தான் பெறல் வேண்டும். நாள்கள் கனவுகளுடன் நகரலாயின. இரட்டைக் குழந்தைகள் மடியில் கனம்.

அவன் அவள் அது என்கின்ற இடைக்கால தமிழ் திரைப்பட ஞாபகம் வருகிறது. சிறப்பான கதையம்சம்.

குழந்தை பிறக்கும் காலம் நெருங்கி வருகிறது. அறுவை சிகிச்சை – சிசேரியன் பற்றி வைத்தியர்கள் பரிந்துரை செய்கிறார்கள். சுகப் பிரசவம் என்ற கனவு கலைந்து போகிறது.

வாடகைத் தாய். பண ஒப்பந்தம். வயிற்றில் வேறொரு குடும்பத்தின் குழந்தைகள். உணர்வுகள் எப்படி இருக்கும்? குழந்தைகள் மீது பற்று பந்த பாசம்? அது அவரவர் சுபாவத்தையும் பொறுத்தது.

இவள் சாப்பிடுவதுதான் இவளது இரத்தத்தில் கலந்து அந்த குழந்தைகளுக்கு போஷாக்கு. என்றால் பாசம் பொங்காமலா விடும்? பாலூட்டல் ஒப்பந்தத்தில் இல்லை. குழந்தைகள் பிறந்ததும் இவள் வேலை முடிந்துவிடும். தன்னை தேற்றி எழ வேண்டியதுதான். அவர்கள் குழந்தையை எடுத்துச் சென்றுவிடுவார்கள்.

நாளும் வந்தது. டிசம்பர் 12, 2016 சீசர் மூலம் குழந்தைகள் பிரசவம். குழந்தைகளை ஜெசிக்கா காண முடியவில்லை. இடையில் தெளிவற்ற திரை மறைப்பு இருந்தது. அவள் இயல்புக்கு மீள முன்னமே குழந்தைகளை சத்திர சிகிச்சைக் கூடத்தில் இருந்து எடுத்துச் சென்றுவிட்டார்கள்.

வாடகைத் தாய் என்றாலும் இவளும் ஒரு தாய்தானே. அன்று இரவு அந்தச் சீனத்தாய் இவளைச் சந்திக்க வருகிறாள். தனது கைபேசியில் எடுத்த இரட்டைக் குழந்தைகளின் படத்தையும் காட்டுகிறாள். அவ்வளவுதான். வேறென்ன உறவு கொண்டாடவா முடியும். அவள் போய்விட்டாள்.

ஜெசிக்கா மெல்ல மெல்ல தேறி வருகையில் அவர்கள் கிடைத்த பணத்தில் வசதியான தங்கள் கனவு இல்லத்தில் குடியேற ஏற்பாடுகளை செய்து கொண்டனர். அவளும் கணவனும் இரண்டு குழந்தைகளும் ஓரளவுக்கு வசதியாக வாழப் போதுமான அளவில் இருந்தது அந்த வீடு.

கடன்பட்டு வாழாமல் சொந்த முயற்சியால் தியாகத்தால் கிடைத்த வீடு அது. தேறி வந்து புதிய வீட்டில் கால் பதித்த மகிழ்ச்சியான தருணத்தில் அதிர்ச்சியாக ஒரு குறுந்தகவல் அந்த சீனத் தாயிடம் இருந்து வருகிறது.

இரண்டு குழந்தைகளில் ஒன்று தன்னுடையது இல்லை என்ற சந்தேகம் தெளிவாக அவளுக்கு எழுந்துள்ளது. முதல் நாள் குழந்தைகளை பார்த்தபோதே இந்த சந்தேகம் எழுந்தது என்கிறாள் அவள். அதனால்தான் படத்தை காட்ட வந்திருந்தேன் என்கிறாள். மேலும், இப்பொழுது ஒரு மாதம் கழிந்த நிலையில் அவள் குழந்தைகளின் படத்தையும் அனுப்பி இருந்தாள். ஒரு குழந்தை உனது அல்லவா என்ற கேள்வியையும் எழுப்பி இருந் தாள்.

> ❝ ஆறு வாரங்கள் கழிந்த நிலையில் மருத்துவப் பரிசோதனைக்கு வந்திருந்த ஜெசிக்கா மற்றும் வைத்திய முகவர்களுக்கு சற்று அதிர்ச்சியான தகவலை அந்த ஸ்கான் காட்டியது. அவளது வயிற்றில் இரண்டு குழந்தைகள் வளருகின்றன என்கின்ற தகவல் அது. சீனத் தம்பதிகளின் ஒற்றைக் கரு இரண்டாக உடைந்து ஒத்த இயல்புடைய இரட்டைக் குழந்தைகளாக வளர்ச்சி கண்டிருக்கிறது என்ற விளக்கத்தை அந்த மருத்துவ முகவர்கள் தந்து இருக்கிறார்கள்.

மீண்டும் சர்ச்சையில் மனநிலை. குழந்தை என்னுடையதா? இதை ஜெசிக்கா எதிர்பார்த்து இருக்கவில்லை.



சீனத் தாயின் மன நிலையில் யோசித்தால் அவளின் செலவில் இவள் ஒரு குழந்தை பெற்று இருக்கிறாள். போதாதென்று பராமரிக்கவும் தந்து விட்டாள். அந்தக் குழந்தை அவளுக்கோ வேண்டாத பாரம்.

இவளுக்கோ அதிர்ச்சி. இப்போது ஒரு குழந்தைக்கு தாயாகும் எண்ணம் இவளிடம் இருக்கவில்லை. இருக்கின்ற இரண்டு ஆண் குழந்தைகள் இவளுக்கு போதும்.

(13 ஆம் பக்கம் பார்க்க.)

# மத்தியில் பங்குதாரர் ஆனாலும் மாநிலத்தில் சுயமாகவே முடிவு!

## கட்சித் தோழர்கள் மத்தியில் டக்ளஸ் தெரிவிப்பு!



யாழ்ப்பாணம், செப்.01

வரவுள்ள தேர்தல்களில் மத்தியிலுள்ள கட்சிகளுடன் உடன்பாடுகளை செய்து பங்குதாரர் ஆகிசெயற்பாட்டாலும், மாநில ஆட்சியில் சுயமாகவே நான் முடிவெடுப்பேன் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமையகத்தில் அந்த மாவட்டம் மற்றும் பிரதேசங்களின் நிர்வாக செயலாளர்கள் செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பு செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இரு தினங்களுக்கு முன் நடைபெற்றது. இதன்போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் –

யாரை நாம் ஆதரிக்கின்றோம் என்பது முக்கியமல்ல. அவர்களைக் கொண்டு எமது மக்களுக்கு எதனை சாதித்து கொடுக்கலாம் என்பதில்தான் நாம் அக்கறை செலுத்த வேண்டும்.

கடந்த காலங்களில் நாம் அரசியல் பலத்தை அதிகமாக கொண்டிருக்காது விட்டாலும் மத்தியில் அமைந்த அரசுகளுடன் நாம் கொண்டிருந்த நல்லுறவு காரணமாக எண்ணிலடங்காத சேவைகளைச் செய்து சாதித்துக் காட்டியிருக்கின்றோம்.

நாம் எம் மீதுள்ள நம்பிக்கையில்தான் ஒவ்வொரு செயற்பாடுகளையும் மக்களுக்கு வாக்குறுதிகளாக கொடுத்து அவற்றைபெற்றுக் கொடுத்திருக்கின்றோம். அதேபோல இம்முறையும் ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன பெரமுன கட்சி முன்நிறுத்தியுள்ள வேட்பாளரை ஆதரிப்பதாக முடிவு செய்துள்ளோம்.

கடந்த காலங்களில் நாம் முன்னெடுத்த மதிநுட்ப அரசியல் நகர்வுகளால்தான் அழிவு யுத்தம் எமது மக்களை அழித்துக்கொண்டிருந்த போதும் சரி, அது முடிவுக்கு வந்த பின்னரும் சரி, வடக்கில் பல்வேறு அபிவிருத்தி பணிகளைச் செய்துமுடிக்கவும் பறிக்கப்படவிருந்த எமது மக்களின் பல உரிமைகளையும் தக்கவைத்துக்கொள்ளவும் முடிந்தது.

குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில்தான் இவற்றில் அதிகமானவற்றை சாதித்துக் காட்டியிருந்தோம்.

அந்தவகையில் மத்தியில் யாருடன் பங்காளிகளாக நாம் இருந்தாலும் மாநிலத்தில் எமது மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் மற்றும் அரசியல்,அபிவிருத்தி உள்ளிட்ட அபிலாசைகளுக்குத் தீர்வைக் கண்டு கொடுப்பதில்நாம்எமதுதனித்துவத்துடன்தான் செயற்படுவோம். அதிலிருந்து நாம் பின்வாங்கப்போவதில்லை. மத்தியில் பங்குதாரராவதனூடாக இது ஒருபோதும் தடைப்பட்டும் போகாது.

வரவுள்ள தேர்தல்களில் நம்பிக்கையுடன் எமது மக்கள் நாம் முன்நிறுத்துபவர்களை வெற்றிபெறச் செய்து எம்மை பலப்படுத்துவார்களானால் இவற்றை சாதித்துக்காட்ட என்னால் முடியும். – என்றார்.

# ஜனாதிபதித் தேர்தலைத் தாமதப்படுத்துவதற்கு முயற்சித்தால் மு.கா. நீதிமன்றுக்குச் செல்லும்

## செயலாளர் நாயகம் நிஸாம் காரியப்பர் அறிவிப்பு

கொழும்பு,செப்.01

ஜனாதிபதித் தேர்தலை தாமதப்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுமாயின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நீதிமன்றம் செல்லும் என்று அக்கட்சியின் செயலாளர் நாயகமும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.நிஸாம் காரியப்பர் தெரிவித்தார்.

நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்குப் பின்வழியால் நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு இடமளிக்க மாட்டோம் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ்தலைவரான அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்திருக்கும் கருத்து தொடர்பில் கேட்டபோதே செயலாளர் நாயகம் நிஸாம் காரியப்பர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கு அரசாங்கம் திரைமறைவில் முயற்சிப்பதாக ஊடகங்கள் மூலம் அறிய முடிகிறது. இது விடயமாக எமது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியுடன் பேசப்படவில்லை. ஆனால் எமது நிலைப்பாடு தொடர்பில் எம்முடன் பேசாத நிலையில் இம்முயற்சி முன்னெடுக்கப்படுமாயின் அதனை முஸ்லிம் காங்கிரஸ் வன்மையாக எதிர்க்கும்.

ஜனாதிபதி மைத்திரி, பிரதமர் ரணில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ஆகிய மூவருக்கும் அடுத்த ஜனாதிபதிப் பதவியில் அமர்வதற்கு வாய்ப்பில்லை என்பதனால் நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கு அவர்களுக்குள் உடன்பாடு எட்டப்படுவதற்கு வாய்ப்பிருக்கிறது. இதன் மூலம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் உறுதி செய்யப்படலாம். அவ்வாறாயின் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் இதனைச் செய்வதற்கு அரசாங்கம் முற்படலாம்.

அரசமைப்பில் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்காக சொல்லப்பட்டிருக்கின்ற வழிமுறைகளை நிறைவேற்றுவதற்கு ஒரு கால அவகாசம் தேவைப்படும். குறிப்பாக சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றும் நடத்தப்பட வேண்டும். இந்நிலையில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறாமல் தாமதமடைந்து செல்வதற்கு வாய்ப்பிருக்கிறது. அக்காலம் முழுக்க சமகால ஜனாதிபதி பதவியில் நீடித்திருப்பார். இதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

ஆகையினால் ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை குறுகிய காலத்தினுள் எதிர்நோக்கியிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்குமாயின் நாங்கள் உயர் நீதிமன்றத்தில் இதனைச் சவாலுக்குட்படுத்துவோம் என்று ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் மேலும் குறிப்பிட்டார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.09.2019 இல் வெளியிடப்பெற்றது.


எவகிறீன் அச்சகம்
யாழ்ப்பாணம்
வடக்கு – கிழக்கு தமிழர் தாயகத்தில்
முதல் முறையாக அறிமுகப்படுத்துகின்றோம்.
கலைத்துவமும், நவீன தொழில் நுட்பமும்
இணைந்த துரித அச்சக சேவை
ஒரே சமயத்தில் பல வண்ணங்களில் அச்சிடும் இயந்திரம் மூலம்
குறைந்த செலவில், குறுகிய நேரத்தில்
அதி உயர் தரத்தில் அச்சிட்டுத் தருகின்றோம்.
HEIDELBERG
Speedmaster
ஒரே நேரத்தில்
15000 பிரதிகள்
(ஒரு மணித்தியாலத்தில்)
(15000 X 4 = 60000 IMPRESSION)
4 வர்ணங்கள்
+
Vanish Coating
Glossy / Matt
Evergreen
EXPRESS
PRINTING
EVERGREEN
PRINTERS
இல. 693, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
021 221 9893
Mobile : 0777 1414 44
Email : evergreenjaffna@gmail.com
HIGH TECH DESIGNING &
HIGH TECH PRINTING WITH US
வாடிக்கையாளர்களுக்கும்
அச்சக நிறுவனங்களுக்கும் விசேட விலைக்கழிவு.

# வலிந்து காணாமலாக்கப்பட்ட எம்மவர்களுக்காக லண்டனில் திரண்டு குரல் கொடுத்த உறவுகள்









சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில் லண்டனில் ஒன்றுகூடிய தமிழர்கள் கவனவீர்ப்பு போராட்டத்திலும் தழிழினம் மீது மேற்கொள்ளப்பட்ட அடக்கு முறைகளை எடுத்தியம்பும் காட்சிப் பதாகைகளும் வைக்கப்பட்டு பிரசார பணியிலும் ஈடுபட்டனர்.

லண்டன் Trafalgar Square பகுதியில் நாடு கடந்த தமிழீழ அரசின் ஏற்பாட்டில் வெள்ளியன்று மதியம் 12.30 தொடக்கம் மாலை 4.00 வரை நடைபெற்ற இப் போராட்டத்தில் லண்டன் வாழ் தமிழர்கள் கலந்துகொண்டதுடன் இலங்கை அரசுக்கு கண்டனம் தெரிவிக்கும் கொட்டொலி களையும் முழங்கினர். மேலும் தாயகத்திலிருந்து வருகைதந்த வடக்கு, கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் செயலாளர் திருமதி லீலாதேவி ஆனந்த நடராஜாவும் அங்கு சிறப்பு உரையை ஆற்றினார்.

காணாமல் போனோர் அலுவலகம் மீதும் காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகள் நம்பிக்கை இல்லாமையை வெளிக்காட்டியுள்ளனர். ஆணைக்குழுக்களும் திணைக்களங்களும் தமிழர்களுக்கான தீர்வினை தரப் போவதில்லை என்பதை இலங்கை மீண்டும் நிரூபித்து விட்டது. ஆகவே சர்வதேசம் தலையிட்டு இப்பிரச்சினைக்கான நீதியை உடனடியாக பெற்றுத்தர வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் கூறினர்.

மேலும் ஸ்ரீலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு கொண்டு செல்வதற்கான முயற்சிகளில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

(இ)

# 'நல்லூர் வரவேற்கின்றது' வளைவு யாழ்ப்பாணம் - செம்மணி வீதியில்!

## நேற்றுக் காலை அடிக்கல் நடப்பட்டது





யாழ்ப்பாணம்,செப்.01

யாழ்ப்பாணம் செம்மணி வீதியில் நல்லூர் வரவேற்கின்றது எனும் வளைவுக்கான அடிக்கல் நேற்றுக் காலை சுப நேரத்தில் நடப்பட்டது.

ஏ9 பிரதான வீதியை இணைக்கும் செம்மணி வீதியில், அறுபது லட்சம் ரூபா நிதியில் நல்லூர் வரவேற்கின்றது வளைவு நிர்மாணிக் கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில், அடிக்கல் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனால் நட்டு வைக்கப்பட்டது.

வளைவில், நல்லூர் ஆலயத்தை அடையாளப்படுத்தும் சிற்பங்களும் வடிவமைக்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில், யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் இமானுவல் ஆனல்ட், ஆணையாளர் த.ஜெயசீலன், நல்லூர்,கோப்பாய் பிரதேச சபை தவிசாளர்கள் மற்றும் செயலாளர்கள், கல்விக் காருண்யன் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் எனப் பலரும் பங்கெடுத்திருந்தனர்.

அடிக்கல் நடும் நிகழ்வின் கிரியைகளை நல்லூர் ஆலய பிரதம குரு வைகுந்தவாசக் குருக்கள் நெறிப்படுத்தினார்.

# கனடாவில் பிரமிக்க வைத்த 'தமிழர் தெருவிழா 2019'!





கனடியத் தமிழர் பேரவையினரால் வருடாந்தம் ஒழுங்கு செய்யப்படும் 'தமிழர் தெரு விழா'வில் இவ்வாண்டு சுமார் இரண்டரை லட்சம் மக்கள் வரை கலந்து கொண்டிருக்கிறார்கள் என அறிய வருகிறது. தமிழர்கள் வாழும் நாடுகளில் நடத்தப்படும் தமிழ் விழாக்களில் குறிப்பிடத்தக்கதாகக் காணப்படும் 'தமிழர் தெருவிழா' 5ஆவது முறையாக இவ்வாண்டு கடந்த சனி, ஞாயிறு (2019 ஒகஸ்ட் 24, 25) மார்க்கம் வீதியில் கோலாகலமாக நடைபெற்றது.

தமிழர் தெருவிழாவை இவ்வாண்டும் ரொறன்ரோ மேயர் ஜோன் ரோறி உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். கனடிய தமிழர் பேரவையின் தலைவரான சிவன் இளங்கோ வரவேற்புரை நிகழ்த்தினார். ஒன்ராறியோ மாகாண நிதியமைச்சர் ரொட் பிலிப்ஸ்ஸுடன் போக்குவரத்து அமைச்சர் கரோலின் மல்ரோனியும் ஒன்ராறியோ மாகாண அரச பிரதிநிதிகளாக விழாவிற்கு வந்து சிறப்பித்தனர். மேலும், கனடாவின் மத்திய ஒன்ராறியோ மாநில அரசாங்கப் பிரதிநிதிகளும் லிபரல், கொன்சவேடிவ், என்.டி.பி. உட்பட பல்வேறு அரசியல் கட்சிப் பிரமுகர்களும் சமூகத் தொண்டர்களும் வருகை தந்து தமிழ் மக்களுடன் இணைந்து தமிழர் தெருவிழாவை உற்சாகமாகக் கொண்டாடியமையையும் காணக் கூடியதாக இருந்தது.

விழா நடைபெற்ற வீதிப்பகுதி இரு தினங்களும் போக்குவரத்திற்கு முழுமையாக மூடப்பட்டு தமிழர் பெருமையைப் பறைசாற்றும்



பல்வேறு நிகழ்ச்சிகள் திறந்த வெளியில் அரங்கேறின.

குறிப்பாக விதவிதமான உணவு வகைகள், பழவகைகள், குளிர்பண்டங்கள் ஒருபுறமாகவும் மயிலாட்டம், கரகாட்டம், சிலம்பாட்டம், ஆடல் பாடல் கலைநிகழ்ச்சிகள், வர்த்தக அங்காடிகள், சிறுவர்க்கான பொழுதுபோக்கு நிகழ்வுகள் என்பன








மறுபுறமாகவும் அமைந்து தமிழ்மக்களை மட்டுமல்லாது கனடாவின் பிற இனத்தவர்களையும் மகிழ்வூட்டிக் கொண்டிருந்தன. பல்கலாசார நிகழ்வு நேரத்தின்போது எகிப்து, மெக்சிக்கோ, கொரியா, சீன நாட்டுக் கலைஞர்களும் கலை நிகழ்ச்சிகளைத் தந்து பார்வையாளர்களை மெய்மறக்கச் செய்தனர்.

இருதினங்களும் கனடாவின் தமிழ் கலைஞர்களுடன் இலங்கை இந்தியாவிலிருந்து வருகை தந்தவர்களுமாக சுமார் நானூறுக்கும் மேற்பட்ட மேடைக் கலைஞர்கள் தெருவிழாவைச் சிறப்பித்தனர். கனடாவின் பாடகர்களான சின்மயி, நவ்47 மற்றும் தீபிகா மகாதேவனுடன் இன்னும் பலரும் வண்ணமயமாக ஒளிர்ந்த மேடையில் தோன்றி பாடல்களைப் பாடி மெய்மறக்கச் செய்தனர். இவர்களுடன் தமிழகத்திலிருந்து வருகை தந்த சுப்பர்சிங்கர் பாடகர் திவாகர், வி.எம். மகாலிங்கம் ஆகிய இருவரும் சிறப்புப் பாடகர்களாகக் கலந்து கொண்டனர். மேலும் முதன்முறையாக தாயகத்திலிருந்தும் ஒரு பாடகர் தெருவிழாவில் பாடுவதற்கு இம்முறை அழைக்கப்பட்டிருந்தார். வவுனியாவிலிருந்து வருகை தந்த இளம் பாடகர் ஜெயந்தன் கந்தப்பு துள்ளிசையாக பாடல்களைப் பாடி அனைவரையும் கவர்ந்தார். பாடல்களுக்கு மெகாரியூனோ்ஸ், அக்னி இசைக்குழுக்கள் பின்னணி இசை வழங்கின.

இவ்வாண்டிற்கான விழாவில் சிறப்புறக் குறிப்பிடத்தக்க விதமாக பல நிகழ்வுகள் அமைந்திருந்தமையும் கவனிக்கத்தக்கது. கி.மு. 4 ஆம் நூற்றாண்டிலிருந்து இன்றைய காலகட்டம் வரை தமிழர் வரலாற்றின் பல்வேறு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சம்பவங்களின் தொகுப்பாக அமைந்த கண்காட்சி அதனைக் காணவந்த பார்வையாளர்களைப் பிரமிக்க வைத்தது.

யுத்த காலத்தின்போது ஈழத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களை கணிக்கும் விவரத் தொகுப்பு ஒன்றைப் பூரணப்படுத்தும் விவரச் சேகரிப்பு நிலையமும் தெருவிழாவின்போது ஏராளமான பார்வையாளர்களைப் பங்காளர்களாக்கியது. படுகொலை செய்யப்பட்டவர்களைக் கணக்கெடுத்தல் ('Counting the Death') என்ற தலைப்பிலான விவரச் சேகரிப்புத் திட்டத்தை அமெரிக்காவை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் HRDAG என்ற மனித உரிமைகள் அமைப்பு தெருவிழாவிற்கு வந்து நடத்தியிருந்தது.

ரொறன்ரோ பல்கலைக் கழகத்தில் தமிழ் இருக்கை ஒன்றை அமைக்கும் திட்டத்தைப் பிரபலப்படுத்தும் வகையில் அமைந்த அலங்கார வண்டி ஊர்வலமும், கண்காட்சியும் தமிழ் ஆர்வலர்களைப் பரவசப்படுத்தின. இளைய தலைமுறையினருக்காகப் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைவதையொட்டி அதே இளைய தலைமுறையினருக்காகப் பல்வேறு போட்டிகளும் தெருவிழாவின்போது நடத்தப்பட்டு ஊக்கமளிக்கப்பட்டது.

உலகளாவிய நிலையில் வாழும் பல்வேறு தமிழ்க் கல்விமான்களும் தமிழ் ஆர்வலர்களும் இவ்வகைக் கண்காட்சிகள் குறித்தும் தெருவிழா பற்றியும் தமது பலத்த பாராட்டுக்களை விழா அமைப்பாளர்களான கனடியத் தமிழர் பேரவைக்கு தெரிவித்து வருகின்றனர்.







# சின்ன விடயங்கள்; செய்து தான் பாருங்கள்!

1. இன்றே செய்து முடிக்கக் கூடியதை 'நாளை' என்று ஒத்திப் போடாதீர்கள்.

2. நீங்களே செய்து கொள்ளக்கூடிய விடயத்திற்காக இன்னொருவரைத் தொந்தரவு செய்யாதீர்கள்.

3. பணம் கைக்கு வரும்முன்னே அதற்கான செலவுகளைச் செய்யாதீர் கள்.



4. விலை மலிவாய்க் கிடைக்கிறது என்பதற்காக, வேண்டாத ஒன்றை வாங்காதீர்கள்.

5. பசி, தாகத்தை விட சுயமரியாதை பெரிது என்பதை மற வாதீர்கள்.


6. எவ்வளவு முடியுமோ அவ்வளவு குறைவாய்ச் சாப்பிடுங்கள்.

7.விரும்பிச் செய்யும் எதற்காகவும் பின்னால் வருத்தப்படாதீர்கள்.

8. கற்பனையில் உருவாகும் கவலைகளை எண்ணி நிஜத்தில் வருந்தாதீர்கள்.

9. மென்மையாக அணுகுங்கள், மேன்மையாக முடிவெடுங்கள்.

10. கோபமாயிருக்கும் போது, பேசுவதற்கு முன்னால் பத்து வரை எண்ணுங்கள். இன்னும் கோபமாயிருந்தால் நூறுவரை எண்ணுங்கள்.




# யாருக்கு கிடைக்கிறது இப்படியான கணவன்!



தான் வருவதற்கு நேரம் ஆகும். என்றால் போன் செய்து நீ சாப்பிடு என்று கூறும் கணவர்கள்.

சலிப்பாக இருக்கிறது என்றால் நீ தூங்கு நான் பார்த்துக் கொள்கிறேன் என கூறும் கணவர்கள்.

தனது தேவையை குறைத்து மனைவிக்கு வேண்டியதை வாங்கும் கணவர்கள்.

மனைவி வீட்டு உறவினர்கள் வந்தாலும் பாகுபாடு இல்லாமல் உபசரிக்கும் கணவர்கள்.

சமையல் அறையில் கூட நின்று உதவி சங்கீதமாக்கும் கணவர்கள்.

ஞாயிறு என்றால் மனவியை வெளியே கூட்டிச் சென்று மகிழ்விக்கும் கணவர்கள்.

மனைவி உடல் நலமில்லை என்றால் பதறித் துடிக்கும் உள்ளம்.

மனைவியிடம் எந்த விடயமாக இருந்தாலும் கலந்தா லோசிக்கும் உள்ளம்.

மனைவியை சரிசமமாக நடத்தும் உள்ளம்.

மனைவி குடும்பத்தில் ஒரு பிரச்சினை என்றா லும் உதவத் துடிப்பது.

மனைவி கோபத்தில் கத்தினாலும் அமைதி காத்து புரிய வைப்பது.

ஆக மொத்தம் மனிதன் மனிதனாக மனிதத் தன்மையுடன் நடந்து கொள்வது.

இத்தனை நற்குணங்களும் அமையப் பெற்ற வாழ்க்கைத் துணைவரை அடைந்த இல்லத்தரசிகள் அனைவருமே புவியில் சொர்க்கம் காணும் புண்ணிய ஆத்மாக்கள்.

# 4000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த காதலர்கள் கல்லறை கண்டுபிடிப்பு

கஜகஸ்தான் நாட்டில் 4000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த காதல் தம்பதிகளின் கல்லறை ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கஜகஸ்தான் நாட்டின் காரகண்டா மாநிலத்தில் தொல்லியல் துறை ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர். அங்கு ஒரு குறிப்பிட்ட பகுதியில் குழி தோண்டி ஆராய்ச்சி மேற்கொண்டனர். அப்போது 2 எலும்புக்கூடுகள் ஒன்றாக புதைக்கப்பட்ட கல்லறை ஒன்று இருந்துள்ளது.



அந்த எலும்புக் கூடுகள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்ப்பதை போல இருந்துள்ளது. இந்த எலும்புக் கூடுகளை கண்டதும் ஆராய்ச்சியாளர்கள் வியப்பில் ஆழ்ந்தனர். அருகிலேயே ஏராளமான தங்கம், வெள்ளி நகைகள் இருந்துள் ளன. ஒரு எலும்புக் கூட்டின் அருகே வளையல்களும், மோதிரங்களும் கிடந்துள்ளன. இந்த எலும்புக் கூடுகளை ஆராய்ச்சி செய்த ஆய்வாளர்கள் கூறுகையில்–

இவை 16,17 வயதுடைய பெண் மற்றும் ஆண் எலும்புக் கூடுகள். இந்த கல்லறையில் ஒருவரை ஒருவர் பார்த்தபடி இறந்துள்ளனர். இதனால் இவர்கள் காதலர்களாகத்தான் இருக்க வேண்டும்.




**Mani Pmp**
3 hrs •

முறைத்துப் பார்த்தாலே ஒருத்தரை பழிவாங்கி விட்டதாக நினைத்து கொள்கின்றனர் வாகன ஓட்டிகள்

You, நம்தேவ் and 23 others · 1 Comment

Like · Comment · Share

**sʜαɨℓυ**
@Lovly_Shailu

எதுவுமே செய்யாமல்
இருப்பவன் மட்டும்
சோம்பேறியல்ல,
தன்னால் முடிந்ததைத்
செய்யாமல் இருப்பவனும்
சோம்பேறியே...!!


**காளையன்**
@Giri47436512

எவ்வளவு கவனமாக
அப்பாவின் சொல்படி
நடந்தாலும் குறை
சொல்லி அப்பா கொட்டி விட..
கோபம் கொள்ளாதே.. மகனே!!
உலகம் அப்படியானது என்று
உணர்த்தவே!!..

twitter

**தமிழினி**
TamilZhinii

மரத்தின் நிழலில் வாழும்
சிறு செடிக்கு
மரம் பட்டுபோன
பிறகுதான் தெரிகிறது
வெட்ட வெளியின் பரிச்சியம்!



**இயந்திர இதயம்**
VegaMcHrt91

மனிதனே மனிதனுக்கு எதிரி
மனிதனே இயற்கைக்கும் எதிரி.

காடுகளை அழித்து விவசாயம் செய்ய
துடிக்கும் கார்ப்பரேட் சுயநலவாதிகளால்
அமேசான் காடுகளில் பயங்கர காட்டு தீ.
எங்கும் பரவம், காட்டு தீயை
கட்டுபடுத்த முடியாத
வேடிக்கை பார்க்கும்
கையாலாகாத வல்லரசு நாடுகள்.

**மதுரைஇளவரசி**
*(மேகத்தைத்துரத்தியவள் )*
kdponnuu

நாம் சாப்பிடும் ஒவ்வொரு அரிசியிலும்
பலவிவசாயிகளின்
கஸ்டம் கண்ணீர் கவலை வலிகள்
மறைந்துள்ளது என்பதை நினைவில்
வைத்துக்கொள்ளுங்கள் உணவை
உதாசீனபடுத்தாதீர்கள்
வீணாக்காதீர்கள் - விவசாயிமகள்

**சப்பாணி**
manipmp

ஒரு கூட்டத்தில் நம்பிக்கைக்கு விரோதமாக
இருப்ப வரை ஆங்கிலத்தில் கறுப்பு செம்மறி
என அழைப் பார்கள்.
தவறான மொழிபெயர்ப்பால் கறுப்பு ஆடு
என்கிறோம்.ஆடுகளில் கறுப்பு சாதரணம்.
கறுப்பு செம்மறி தான் அரிது